
பொழிவு - 20
குவிப்பு - 10
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
ஒக்ரோபர் - 2017
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 84 / News / 2017"

## உலக மறைபரப்புத் தினம் – ஒக்ரோபர் 22 –





இவ்வாண்டு உலக மறைபரப்பு ஞாயிறு தினம் ஒக்ரோபர் மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படுகின்றது. மறையறிவிப்புக்காக திருஅவை தமது செபங்களையும், பரித்தியாகச் செயல்களையும், நிதிப்புதவியையும் தாராளமாக வழங்கவேண்டுமென திருச்சபைத்தாய் எதிர்பார்க்கின்றாள்.

வழமையான உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும் மறைபரப்பு ஞாயிறு நிதி சேகரிப்பு முயற்சிகளில் ஈடுபடுமாறு மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை மன்னார் மறைமாவட்டப் பங்குத்தந்தையர்களையும், பங்கு மக்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகளுடைய (Pontifical Mission Societies) மன்னார் மறைமாவட்ட இயக்குனர் அருட்திரு. ஏ. ஞூட் குருஸ் அடிகளார் உலக மறைபரப்பு ஞாயிறு தின வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றார்.

## மேதகு இரா யோசேப்பு ஆண்டகையின் ஆயர்த்துவ வெள்ளி விழா



**ஆயர் பணியில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்து வெள்ளி விழாக் காணும் மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு இரா யோசேப்பு ஆண்டகைக்கு மன்னார் மறைமாவட்ட சமூகத்தின் நல் வாழ்த்துக்களையும் செபங்களையும் மகிழ்வோடு தெரிவிக்கின்றோம்.**

### வாழ்க வாழ்க ... பல்லாண்டு வாழியவே!

கனத்தமழை பொழிகையிலே கரத்தேந்திய குடையானீர்
இரத்தமழை பெய்கையிலே துயர் துடைக்கும் துணியானீர்
பலத்த குண்டு வெடிக்கையிலே பாதுகாப்பு அரணானீர் - எம்
நிலத்து மனிதருக்கு இரக்க சீலரானீர் ஆண்டகையே!

மரத்த எம் மனங்களின் தவிப்பைத் தரணியெங்கும்
உரத்துக் கூறினீர் உண்மை உரைத்திட்டீர்!
சிரந்தைத் தாழ்த்திக் கரத்தைக் குவிக்கின்றோம்
பரத்தை ஆளுகின்ற பரனுமக்கு, பல்லாண்டு வாழ்வருள!

நீதி கோரி நெஞ்சு நிமிர்த்தி, நீசப்பாவிகள்முன்
பீதி ஏதுமின்றி வீதி வீதியாக விரநடைபோட்டீர்
நாதியாருமற்று நிர்க்கதியானபோது நீரே அருகிருந்து
சோதிச்சுடரெனவே சுற்றிக் காத்துநின்றீர்.

எதிகளை வீசக்கனால் எங்கள் சோதரர் கால் கரங்கள்
முறிபட்டு முடங்கினரே! முழுக்கவிட்டீர் முழு உலகும்
வெறிகொண்ட வீரர்களின் வெறியாட்டம் அடக்குவதே
குறியாகக் கொண்டுநீர் கொடூரங்கள் குறைத்து விட்டீர்!

அகதியாயிருந்த எங்கள் அவலநிலை போக்குதற்கு
சகதி என்றும் பாராது சம்பவ இடமெல்லாம் சஞ்சாரம்
செய்தீரே! தகுதிபெற்ற தலைவராக வாய்த்த எம் ஆயர்
தந்தாய்!
மிகுதியுள காலமும் நின் மேன்மைதனை மறப்போமா?
வாழ்க! வாழ்க! பல்லாண்டு வாழியவே!

- செழுங்கலை வித்தகர் தேவதாசன் அல்மேடா, முருங்கன்

## மன்னார் மறைமாவட்டத்திற்கான புதிய இணையத்தளம்
### அருட்கடல் arudkadal.com




மன்னார் மறைமாவட்டம் தொடர்பான தகவல்களை வழங்கும் நோக்கோடு 'அருட்கடல்' என்ற பெயரில் புதிய இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. arudkadal.com என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த இணையத் தளம் நவம்பர் மாதம் 1ஆம் திகதியில் இருந்து செயற்பட ஆரம்பிக்கும்.

மன்னார் மறைமாவட்ட நிர்வாக அலகு பற்றிய விபரங்கள், மன்னார் மறைமாவட்டப் பங்குகள், திருத்தலங்கள், குருக்கள் பற்றிய விபரங்கள், மறைமாவட்டச் செய்திகள், ஆலய விழாக்கள், மன்னா பத்திரிகை போன்றவற்றை இந்த இணையத் தளத்திற்குச் சென்று பார்வையிடலாம். இதைவிட ஞாயிறு மறையுரைச் சிந்தனைகள், 'அருட்சாதன வாழ்வில் வளர்வோம்', 'செபத்தில் நிறைவோம்', 'இன்றைய புனிதர்', கத்தோலிக்க வானொலிகள், கத்தோலிக்க தொலைக்காட்சிகள், கத்தோலிக்க பத்திரிகைகள் போன்றவற்றையும், திருத்தந்தையின் சிந்தனைகள், கத்தோலிக்க பாடல்கள் போன்றவற்றையும் இந்த இணையத்தளத்தில் பார்த்து, கேட்டு பயன்பெறலாம்.

## மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகரின் வாழ்த்துச் செய்தி



மன்னார் மறைமாவட்ட ஆயராகத் திருநிலைப் - படுத்தப்பட்டு 25 ஆண்டுகளை நிறைவுசெய்து ஆயர்த்துவ வாழ்வின் வெள்ளி விழாவைக் காண்கின்ற ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆயர் யோசேப்பு ஆண்டகை அவர்களை எனது சிறிய குருமடக் காலத்தில் இருந்து நான் நன்கு அறிவேன். யாழ் மறைமாவட்டக் குருக்களாக நாம் இருவரும் ஒன்றாக யாழ் மறைமாவட்டத்தில் பணி செய்தோம். நான் திருமலை மட்டுநகர் ஆயராகவும் அவர் மன்னார் ஆயராகவும் பணி செய்த நாட்களில் சக ஆயர் என்ற வகையில் நான் அவரோடு நெருங்கிப் பழகி இருக்கிறேன். யுத்த சூழ்நிலை நிலவிய மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் நான் அவரோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தேன். இப்படியாக எம் இருவருக்கும் இடையிலான உறவும் தொடர்பும் பலவாண்டுகளாகத் தொடர்ந்து வருகின்றது.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வரின் வாழ்த்துச் செய்தி



மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களுடைய ஆயர்த்துவ வெள்ளி விழாவில் என் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

மறைமாவட்டக் குருமுதல்வர் என்ற நிலையில் 10 வருடங்களுக்கும் மேலாக நான் அவருடன் நெருங்கிய விதத்தில் இணைந்து பணியாற்றியுள்ளேன். மறைமாவட்ட நிர்வாகக் கடமைகளிலும், மேய்ப்புப் பணி சார்ந்த பணிகளிலும் அவர் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டார்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## உலக ஆசிரியர் தினம் – ஒக்ரோபர் 06







## தீபாவளி வாழ்த்துக்கள்!



ஒக்ரோபர் 18ஆம் திகதி தீபத் திருநாளைக் கொண்டாடும் அனைத்து இந்து சமய சகோதரர்களுக்கும் மன்னாவின் நல்வாழ்த்துக்கள்!

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## ஒக்ரோபர் - செபமாலை மாதம்

ஒக்ரோபர் மாதம் செபமாலை மாதம். கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மரியன்னைமீது தமக்குள்ள பக்தியை வெளிப்படுத்தி குடும்பங்களாகவும், குழுக்களாகவும் செபமாலை செபிக்கும் மாதம். இந்த மாதத்தில் செபமாலைப் பக்திபற்றி ஆராய்வது நமது செபமாலைப் பக்தி முயற்சியை வலுப்படுத்தவும் வளப்படுத்தவும் உதவிசெய்யும்.

**மணிகளை உருட்டிச் செபிக்கும் பழக்கம்**

செபமாலைக்கும் மற்ற மதங்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது. மணிகளை உருட்டி மந்திரங்களைச் செபிக்கும் பழக்கம் இந்து மதம், புத்த மதம், இஸ்லாம் மதம் மற்றும் யூத மதங்களில் பின்பற்றப்படுகிறது.

மனதை ஒருமுகப்படுத்தவும், மனதை அமைதி நிலைக்குக் கொண்டுவரவும் கையில் மணிகளை வைத்து அதனை உருட்டி அதில் கவனம் செலுத்தும் முறை பேருதவியாக இருப்பதை எல்லா மதத்தினரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

**செமாலைப் பக்தியின் ஆரம்பம்**

கடந்த 5 நூற்றாண்டுகளாக மேற்கத்திய திருச்சபையில் மரியன்னைப் பக்தி முயற்சிகளுள் செபமாலை சொல்வது முதன்மை இடம் பெறுகின்றது. செபமாலைப் பக்தியின் தொடக்கத்தை நாம் பார்க்கும்போது அதன் வரலாறு சுவாரஸ்யமானது. கி. பி. 1571ஆம் ஆண்டில் லெபாந்தோ என்னும் இடத்தில் கிறிஸ்தவர்களின் கப்பற்படை மாபெரும் வெற்றி அடைந்தது. அது, செபமாலை செபித்து கடவுளின் அன்னையிடம் மன்றாடியதால் பெற்ற பேருதவியாகக் கருதப்பட்டது. இதை நினைவுகூரும் ஆண்டுத்தினமாக 1573ஆம் ஆண்டு அன்றைய திருத்தந்தை 5ஆம் பத்திநாதர் ஒக்ரோபர் 7ஆம் திகதியை செபமாலை மாதா திருவிழா என அறிவித்தார்.

**செபமாலைப் பக்திபற்றிய குற்றச்சாட்டுக்கள்**

இன்று செபமாலையைப்பற்றி பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன: "கிளிப்பிள்ளைபோல ஓயாமல் திரும்ப திரும்ப அருள் நிறைந்த மந்திரத்தைச் சொல்வது சிறுவர் சிறுமியர் அல்லது வேலை இல்லாத கிழவிகளுக்குத்தான் பொருந்தும்" என சிலர் கூறுகின்றனர். இதற்கு 12ஆம் பத்திநாதர் பாப்பரசர் இவ்வாறு பதில் கூறுகின்றார்:

"இந்தப் பக்தியை தவறான முறையில் புரிந்துகொண்டதனால் வரும் சிக்கல் இது. திரும்ப திரும்ப அருள் நிறைந்த மந்திரத்தைச் சொன்னாலும், நமது சிந்தனையெல்லாம், நமது ஆண்டவரின் பிறப்பு, வளர்ப்பு, பாடுகள், இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றம், தூய ஆவி, மரியன்னை மகத்துவம் பெற்றது என்பவற்றைப் பற்றியே இருக்கின்றது என்பதே இப்பக்தியின் சாரம். இதைப் பழக்கத்தில் கொண்டுவந்தால் நாள்தோறும் பலமணி நேரம்கூட இந்தப் பக்திக்குச் செலவிடலாம். ஏனெனில் இவ்வாறு நாம் இறை இயேசுவுடனும், தூய ஆவியுடனும், மரியன்னையுடனும் உறவுகொண்டு அதில் முன்னேற்றம் அடைகிறோம்.

செபமாலைப் பக்தியின் திருத்தந்தை என அழைக்கப்படும் 13ஆம் சிங்கராயர் என்னும் பாப்பரசர் சொல்லுவார், "செபமாலைப் பக்தி முயற்சியில் நாம் பங்கேற்கும்போது மரியன்னையின் அரவணைப்பில் நாமிருக்கிறோம். குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்பதுபோல நம் தாய் மரியன்னை ஒவ்வொரு தேவ இரகசியமாக நமக்கு விளக்கிச் சொல்கிறார். இவ்வாறு மரியன்னையைப் பார்த்தவண்ணம் நமது மீட்பைப்பற்றிய காட்சித் தியானத்தில் பங்குபெறுகிறோம். இவ்வாறு இந்தப் பக்தி முயற்சி ஞான வாழ்வின் தொடக்கத்தில் இருப்போருக்கும் பொருந்தும், முதிர்ச்சி அடைந்தோருக்கும் பொருந்தும்."

**செபமாலை – கிறிஸ்துவோடு ஒரு சந்திப்பு**

திருச்சபை நமக்குத் தந்துள்ள நான்கு மறையுண்மைகளைச் செபமாலையின் மூலம் தியானித்துச் செபிப்பதன் வழியாக நாம் நமது அடிப்படை விசுவாசத்தின் மறையுண்மைகளான இயேசுவின் பிறப்பு, பணி, பாடுகள் மற்றும் உயிர்ப்பு ஆகியவற்றை நினைவுகூர்கின்றோம்.

"இருட்டிலும், நோயிலும், சிறையிலும் செபிக்கக்கூடிய செபம் செபமாலை" என செபமாலைத் தாசர் சபையை உருவாக்கிய அருட்தந்தை தோமஸ் அடிகளார் கூறுகிறார். "செபமாலை செபிக்கும் நேரம் மரியாளின் தோழமையுடன், மூவொரு இறைவனுடன் கொள்ளும் ஒன்றிப்புப் பொழுது ஆகும்" என புனித குழந்தை தெரேசா கூறுகின்றார். "ஒவ்வொரு நாளும் செபமாலை செபிக்கிறவன் ஒருபோதும் வேதவிரோதியாக மாட்டான். அவனிடம் பாசின் முயற்சிகள் பலனற்றுப் போகும். இதை மகிழ்ச்சியோடு என் குருதியினால் கையொப்பமிட்டு அறிக்கையிட நான் தயார்" என்று புனித லூயிஸ் மொண்வேட் கூறுகிறார்.

செபமாலை செபிப்பது சாதாரண கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மிகச்சிறந்த பக்தி முயற்சியாகும். எனவே செபிப்போம் செபமாலை! - அன்னைக்குப் படைப்போம் புகழ்மாலை!

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,**
**அன்புடன் அருட்பணியாளர் தமிழ் நேசன்,**
**பதிப்பாசிரியர் - மன்னா**

## புனித யோசவ்வாஸ் தேசிய தினம்

**நற்செய்திக்குச் சான்று பகர்ந்து புனித யோசவ்வாஸ் அடிகளாரின் கனவினை நனவாக்குவோம்**

வஹாக்கோட்டை புனித அந்தோனியார் தேசிய திருத்தலத்தில் நடைபெறும்.
காலை 11.00 மணிக்கு கண்காட்சி ஆரம்பம்.
மாலை 5.00 மணிக்கு விசேட உரை.
இரவு 8.00 மணி முதல் ஞாயிறு அதிகாலை 5.00 மணிவரை திருவிழிப்பு ஆராதனை.

**உண்மையான சீடத்துவம்பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்.**

ஏற்பாடு : கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழு
Web - stjosephvaznationalday.lk
FB - http://fb.com/stjosephvaznationalday
உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

## சுவிற்சிலாந்தில் மடு மாதா திருவிழா

சுவிற்சலாந்து நாட்டில் தமிழ் கத்தோலிக்க மக்கள் வருடாந்தம் கொண்டாடும் மரியஸ்ரைன் திருத்தலத்தில் கொண்டாடும் மடுமாதா திருவிழா இவ்வாண்டும் கடந்த ஒகஸ்ட் மாதம் 19ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

அன்றைய திருவிழா நிகழ்வுகள் காலை 10.00 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகியது. திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட தேரில் மடு அன்னையின் திருச்சுரூபம் பவனியாக எடுத்துவரப்பட்டு நிறைவாக திருச்சுரூப ஆசீர் வழங்கப்பட்டது.



சுவிற்சலாந்து தமிழ் ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனர் அருட்திரு. டக்ளஸ் மில்ரல் லோகு அடிகளார் இத்திருவிழாவிற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தார்.

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2017

### ஐப்பசி

01. குழந்தையேசு ஆலயம் - பறங்கிகமம் (இலுப்பக்கடவை), பாவிலுப்பட்டான் கட்டுகுடியிருப்பு
02. புனித செபமாலை அன்னை திருவிழா - பெரிய நீலாசனை
05. புனித பௌஸ்ரினா திருவிழா - பம்பைமடு
07. சதாசகாய அன்னை திருவிழா - பாவற்குளம்
- புனித செபமாலை அன்னைத் திருவிழா - மடுதிருவிழா
10. குழந்தையேசுவின் சின்னத்திரேசா - முள்ளிக்குளம்
13. பற்றிமா அன்னை திருவிழா - பற்றிமா நகர் (ஓமந்தை)
14. புனித செபமாலை அன்னைத் திருவிழா - தலைமன்னார் ஸ்ரேசன்
- மடுமாதா சிறிய குருமட விழா
20. மன்னார் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை ஆயராக அபிசேகம் செய்யப்பட்டது. (1992)
22. உலக மறைபரப்புத் தினம்
28. புனித யூதாதேயு - மெனிக்பாம், இரட்டைக்குளம், மடுக்குளம்
31. அடைக்கல அன்னை திருவிழா - தட்டாங்குளம்

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## மன்னார் ஆயர் இல்லத்தில் எதிர்க்கட்சித் தலைவர்

**அப்போஸ்தலிக்க பரிபாலகர், ஓய்வுநிலை ஆயர், காணாமல்போனோரது உறவுகளைச் சந்தித்தார்**





கடந்த செப்ரம்பர் 30ஆம் திகதி மன்னார் மாவட்டத்திற்கு வருகைதந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, ஓய்வுநிலை ஆயர் மேதகு இரா யோசேப்பு ஆண்டகை மற்றும் காணாமல்போனவர்களின் உறவினர்கள் ஆகியோருடன் சந்திப்புக்களை நடத்தினார்.

மன்னார் ஆயர் இல்லத்திற்கு மாலை சென்றிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையைச் சந்தித்தார். உடல் சுகவீனமுற்று தற்போது ஓய்விலிருக்கும் அவரை நேரில் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் அவருடைய சுகநலன்கள் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

அதன் பின்னர் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகரைச் சந்தித்தார். இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் குருமுதல்வர் அருட்தந்தை விக்டர் சோசை ஆகியோரும் உடனிருந்தனர்.

இச்சந்திப்பின்போது, புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்கான வழிநடத்தல் குழுவினுடைய இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ளது. அதில் உள்ள விடயங்கள் இறுதியானவை அல்ல. அவ்விடயங்கள் தொடர்பாக மேலும் கலந்துரையாடவேண்டியுள்ளது என திரு. சம்பந்தன் தெரிவித்தார்.


நாம் எமது மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வினையே எதிர்பார்த்துள்ளோம். எமது மக்கள் விரும்பாத தீர்வை உள்ளடக்கிய அரசியலமைப்பு உருவாகும் என்றால் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டோம். தமிழ் மக்களும் சம உரிமை உடையவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு அந்த மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் ஒரு தீர்வுத்திட்டத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அதற்காக நாம் முற்போக்கானவர்களுடன் இணைந்து முழுமையாக எம்மை ஈடுபடுத்தி செயற்படுகின்றோம். அந்தக் கருமங்கள் நன்மையாக அமையும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ஆயரிடத்தில் எடுத்துரைத்தார்.

இதன்போது, உங்களின் முயற்சிகள் வெற்றி பெறுவதற்கு எமது ஆசீர்வாதங்கள் எனத் தெரிவித்த அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை எமது மக்களுக்கு நியாயமான உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக உங்களுக்கான ஒத்துழைப்புகளை நாம் வழங்குவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து ஆயர் இல்லத்தில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களையும் எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் சந்தித்து கலந்துரையாடினார். மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுடைய சங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் இதில் பங்கேற்றிருந்தனர்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்


காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

# தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட அருட்பணி. ரோம் விடுதலை!

# திருத்தந்தையைச் சந்தித்து ஆசீர் பெற்றார்


©AP


©AFP

கடந்த 18 மாதங்களாக இஸ்லாம் தீவிரவாதிகளால் கடத்திவைக்கப்பட்டிருந்த, இந்திய அருள்பணியாளர் ரோம் உழுன்னலில் (Tom Uzhunnalil) அவர்கள் கடந்த செப்ரம்பர் மாதம் 12ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார். தான் விடுதலை செய்யப்பட்ட மறுநாளே வத்திக்கானில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்து ஆசீர் பெற்றார். பின்னர் தனது தாய்நாடான இந்தியாவுக்கு அவர் சென்றார்.

இச்சந்திப்பின்போது திருத்தந்தையின் காலடிகளை முத்தமிட்ட அவர், தான் பிணைக் கைதியாக இருந்த காலம் முழுவதும் தான் எதிர்கொண்ட துன்பங்களைத் திருத்தந்தை மற்றும் திருஅவையின் நலனுக்காக அர்ப்பணித்ததாக அவர் திருத்தந்தையிடம் தெரிவித்தார். திருத்தந்தையும் அருள்பணி ரோம் அவர்களின் நெற்றியில் சிலுவை வரைந்து ஆசீரளித்தார்.

57 வயது நிரம்பிய கேரளாவைச் சேர்ந்த, சலேசிய அருள்பணியாளர் ரோம் உழுன்னலில் அவர்கள், ஏமனில் மறைப்பணியாற்றி வந்தார். இவர் மறைப்பணியாற்றிய பங்கு ஆலயம் குண்டுவீச்சால் சேதமடைந்ததையொட்டி, ஏடனில், அன்னை தெரேசாவின் பிறரன்பு மறைப்பணியாளர் சபையின் முதியோர் இல்லத்தில் தங்கி மறைப்பணியாற்றி வந்தார். இஸ்லாம் தீவிரவாதிகள், 2016ஆம் ஆண்டு மார்ச் 4ஆம் திகதி, அந்த முதியோர் இல்லத்தைத் தாக்கியதில் அன்னை தெரேசா சபையின் நான்கு அருள்சகோதரிகள் மற்றும் 12 பேர் கொல்லப்பட்டனர். அச்சமயம் இவரும் கடத்தப்பட்டார்.

அருள்பணியாளர் ரோம் அவர்கள் விடுதலை அடைந்துள்ளதையொட்டி இந்தியத் திருஅவையும் நன்றித் திருப்பலிகளை நிறைவேற்றியது. 2016ஆம் ஆண்டு மார்ச் 4ஆம் திகதி ஏமன் நாட்டின் ஏடனில் புனித அன்னை தெரேசாவின் பிறரன்பு மறைப்பணியாளர் சபையின் முதியோர் இல்லத்திலிருந்து கடத்தப்பட்ட சலேசிய சபை அருள்பணியாளர் ரோம் அவர்கள், செப்ரம்பர் 12ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார்.

இவர் ஓமன் நாட்டின் மஸ்கட்டிலிருந்து உரோம் திரும்பினார். இவ்விடுதலை குறித்து செய்தி வெளியிட்டுள்ள ஓமன் நாட்டு ona செய்தி நிறுவனம், வத்திக்கானின் வேண்டுகோள் மற்றும் ஓமன் நாட்டு சுல்தான் Qabus அவர்களின் வழிகாட்டுதல்களின்படி, மஸ்கட்டிலுள்ள அதிகாரிகள், ஏமன் நாட்டினர் சிலரின் ஒத்துழைப்புடன், அருள்பணி ரோம் அவர்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து, அவர் பாதுகாப்பாக விடுதலை செய்யப்படுவதற்கு உதவினர் என்று அறிவித்துள்ளது.

# கறுக்காக்குளம் புனித அந்தோனியார் நூற்றாண்டு விழா









காத்தான்குளம் பங்கிற்கு உட்பட்ட ஆலயங்களில் ஒன்றான கறுக்காக்குளம் புனித அந்தோனியார் ஆலய நூற்றாண்டு விழா கடந்த செப்ரம்பர் மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெற்றது.

நூற்றாண்டு விழாச் சிறப்புத் திருப்பலியை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் மற்றும் பல குருக்கள், அதிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். ஆலய வளாக வாசலில் இருந்து குதிரை வீரர்கள் அணிவகுத்துவர விருந்தினர்கள் ஆலயத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

பின்னர் நூற்றாண்டு விழாத் திருப்பலி இடம்பெற்றது. தொடர்ந்து ஆலயத்தில் நூற்றாண்டு விழாச் சிறப்பு உரைகள், கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. **பதுவை புதுமை** என்ற மகுடம் தாங்கிய நூற்றாண்டு விழா மலரும் வெளியிடப்பட்டது. இம்மலருக்கான ஆய்வுரையை அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் வழங்கினார்.

இம்மலரில் ஆலயம் மற்றும் கிராமம் தொடர்பான பல வரலாற்றுத் தகவல்கள் அடங்கிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. வர்ணப் புகைப்படங்கள் பலவும் இடம்பெற்றுள்ளன. ஆட்காட்டிவெளிப் பங்குத்தந்தையும் காத்தான் குளம் தற்காலிக பங்குத்தந்தையுமான அருட்திரு. டெஸ்மன்ட் ஆஞ்சலோ தலைமையில் ஆலய நிர்வாகத்தினர் இவ்விழாவை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தனர்.

## இரண்டு புதிய நியமனங்கள்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. அந்தோனிதாஸ் டலிமா அவர்கள் ‘செயாரிங்’ (Sharing) எனப்படும் மன்னார் மறைமாவட்ட ஆங்கிலச் செய்தி மடலின் ஆசிரியராகவும், மன்னார் மறைமாவட்ட இணையத்தளத்தின் (Website) ஆசிரியராகவும், சிலாவத்துறைப் பங்கின் மேய்ப்புப்பணி உதவியாளராகவும் (Pastoral Assistant) நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. அமல்ராஜ் குரூஸ் அவர்கள் காத்தான் குளம் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த இரண்டு நியமனங்களும் உடனடியாக அமுலுக்கு வருவதாக குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் மன்னாவுக்குத் தெரிவித்தார்.

## குருநாகல் இழைப்பாறிய ஆயர் இறைபதம்

குருநாகல் மறைமாவட்டத்தின் இளைப்பாறிய ஆயர் மேதகு றேமன் பீரிஸ் அவர்கள் கடந்த செப்ரம்பர் மாதம் 29ஆம் திகதி இறைபதமடைந்தார். ஒக்ரோபர் 2ஆம் திகதி குருநாகல் பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் இடம்பெற்றது. ஆயர் அவர்கள் இறைவனின் இணையற்ற அமைதியில் இழைப்பாறச் செபிப்போம்.

இறைபதமடைந்த ஆயர் அவர்கள் சில காலம் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் கடந்த செப்ரம்பர் 29ஆம் திகதி இறைபதமடைந்தார்.

## கலையருவியின் நடன, நாடகப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன

தூய யோசவ்வாஸ் ஆண்டை மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவியின் ஏற்பாட்டில் இடம்பெறும் போட்டி நிகழ்வுகள் பல ஏற்கனவே திட்டமிட்டபடி நடைபெற்றுள்ளன. கட்டுரை, கவிதை, சித்திரம், பேச்சு, தனிப்பாடல், குழுப்பாடல் ஆகியவை ஏற்கனவே நிறைவுபெற்றுள்ளன.

இனி நடைபெறவுள்ள சில போட்டிகள் பின்போடப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட நடனப் போட்டி (தனி நடனம், குழு நடனம்) ஒக்ரோபர் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மன்/ புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையிலும், ஒக்ரோபர் 21ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட நாடகப்போட்டி நவம்பர் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மன்/ புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையிலும் இடம்பெறும் என்பதை கலையருவி இயக்குனர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் அறிவிக்கின்றார்.

நடனப்போட்டிக்கான விண்ணப்பங்களை ஒக்ரோபர் 21ஆம் திகதி வரையிலும், நாடகப்போட்டிக்கான விண்ணப்பங்களை ஒக்ரோபர் 28ஆம் திகதி வரையிலும் அனுப்பலாம்.

## பறப்பாங்கண்டலில் சந்திரகாசன் நாடக அரங்கேற்றம்










பறப்பாங்கண்டல் பரலோக மாதா (கூட்டத்து மாதா) ஆலயத்தின் குருகுல மகாசபையின் ஏற்பாட்டில் சந்திரகாசன் என்னும் மூன்று இரவுக் கதையைக்கொண்ட நாடகம் கடந்த செப்ரம்பர் மாதம் 17ஆம் 18ஆம் 19ஆம் திகதிகளில் பறப்பாங்கண்டல் பரலோக மாதா ஆலய முன்றிலில் இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வருகைதந்திருந்தார். இதைவிட மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு விக்ரர் சோசை அடிகளார், திருவுளச்சபை மாகாண முதல்வர் அருட்திரு. பெ. இயூஸ்ரஸ் அடிகளார், மெதடிஸ்த குரு அருட்திரு எஸ். ரவி முருகுப்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்நாடகத்தினை முருங்கன் சுண்டிக்குழியைச் சேர்ந்த அமரர் விறாஸ் மொத்தம் கபிரிகேல் புலவர் எழுதியுள்ளார். மன்னார் மாவட்டத்தில் இருபத்தொன்பது கிராமங்களின் ஆதரவுடன் குருகுல மகாசபையினர் இந்நாடகத்தை இருபத்தொரு ஆண்டுகளுக்குப்பின் மேடையேற்றினர். செப்ரம்பர் 12, 13, 14 ஆகிய தினங்களில் மேடையேற்றத் திட்டமிடப்பட்டிருந்த இந்நாடகம் சீரற்ற காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட வேண்டியதாயிற்று.

பறப்பாங்கண்டல் பங்குத்தந்தை அருட்திரு. கொட்வின் (சனா) அடிகளார் இந்நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்பாக ஒருங்கிணைத்து நெறிப்படுத்தியிருந்தார். நாடகக் குழுவினருக்கும், குருகுல மகாசபையினருக்கும் மன்னாவின் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

## துயர் பகிர்கின்றோம்

அமலமரித் தியாகிகள் யாழ் மாகாணத்தைச் சேர்ந்த அருட்திரு. லீனஸ் சொய்சா (அமதி) அவர்களின் அன்புத் தயார் திருமதி திரேசா றெவல் (வங்காலை) அவர்கள் கடந்த செப்ரம்பர் மாதம் 10ஆம் திகதி இறைபதமடைந்தார்.

அருட்தந்தை அவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் மன்னார் மறைமாவட்ட சமூகத்தின் ஆழந்த அனுதாபங்களை மன்னா தெரிவித்து நிற்கின்றது. இறையடி சேர்ந்த தாயார் இறைவனின் அமைதியில் இழைப்பாறச் செபிப்போம்!

## மன்னார் மறைமாவட்டத்திலே

# தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவின் சிறப்புக் கூட்டங்களும் நிகழ்வுகளும்










இலங்கைத் தேசிய கத்தோலிக்க பொதுநிலையினர் ஆணைக்குழுவானது கடந்த செப்ரம்பர் 1ஆம், 2ஆம் திகதிகளில் மன்னார் மறைமாவட்டத்திற்கு வருகைதந்து நடாத்திய அதன் சிறப்பு 3ஆம் காலாண்டுக் கூட்டங்களும், நிகழ்வுகளும் பொதுநிலையினரின் வாழ்வுக்கும் பணிக்கும் மெருகூட்டும் நிகழ்வாக அமைந்திருந்தது.

இந்நிகழ்வுக்கு ஆயர்மன்றப் பிரதிநிதியாக தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுத் தலைவர் அதிவந்தனைக்குரிய ஆயர் நோபட் அண்டாடி ஆண்டகை அவர்களும், பிரதித் தலைவர் அதிவந்தனைக்குரிய இம்மானுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை அவர்களும், மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும், தேசிய மற்றும் மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனர்களும், தேசிய பொதுநிலையினர் இயக்கங்களாகிய உயிர்த்த ஆண்டவர் குழுமம், புதுவாழ்வுக் குழுவினர், இலங்கை கத்தோலிக்க வைத்தியர் சங்கம், இலங்கை கத்தோலிக்க வழக்கறிஞர்கள் சங்கம், தேசிய மரியாயின் சேனை, தேசிய வின்சன் டி போல் சபை, தேசிய குருசில்லோ இயக்கம் போன்ற பல்வேறு இயக்கங்கள், கழகங்களின் இயக்குனர்கள், அருட்தந்தையர்கள், பொதுநிலைத் தலைவர்கள் என 43 பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

இச்சிறப்புக் கூட்டத்தொடரிலே பொதுநிலையினரின் வாழ்வு, பணி, ஆன்மீகம், தலைமைத்துவம் போன்றவற்றை மையப்படுத்திய கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. தேசிய மட்டத்திலே பொதுநிலையினரின் பணி முன்னெடுப்புக்களும், தேசிய தூய யோசப்வாஸ் தினம் போன்ற விடயங்களும் கலந்தாலோசிக்கப்பட்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டன.

இக்கூட்டத்தோடு 1ஆம் நாள் சிறப்பு நிகழ்வாக, மன்னார் மறைமாவட்டத்தில் தூய யோசப்வாஸ் வந்து இறக்கிவிடப்பட்டு இலங்கை மண்ணில் கால்பதித்த இடமாகிய சவுத்பார், மாந்தை மாதா ஆலயம், தூய யோசப்வாசின் முக்கிய மறைப்பணித் தளமாகிய பறப்பாங்கண்டல் ஆகிய இடங்களை இக்குழுவினர் செப உணர்வுடன் தரிசித்து, திருப்பலி நிறைவேற்றி, ஆன்மீக திருயாத்திரை மேற்கொண்டனர். இது அனைவரது மனதிற்கும் அகமகிழ்வைத் தந்தது.

தொடர்ந்து இரண்டாம் நாளிலே தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவின் குழுவினரை மன்னார் மறைமாவட்ட குடும்பநல பொதுநிலையினர் பணி மையம் மாலையிட்டு, இன்னியம் இசைத்து இனிதே வரவேற்றனர்.

மன்னார் மறைமாவட்டப் பொதுநிலையினர் பணிகளை தேசிய ஆணைக்குழு கேட்டறிந்து கருத்துப் பரிமாறிய நிகழ்வு பாங்காக அமைந்திருந்தது. மன்னார் மறைமாவட்ட குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழுவின்கீழ் இயங்கிவருகின்ற பணிக்குழுக்களாகிய, மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவை, மறைமாவட்ட குடும்பநலப் பணிக்குழு, மறைமாவட்ட மரியாயின் சேனை, மறைமாவட்ட வின்சன் டி போல் சபை, மறைமாவட்டக் குருசில்லோ இயக்கம், மறைமாவட்ட கத்தோலிக்க பெண்கள் பணிக்குழு, மன்னார் மறைமாவட்ட மலரும் மணவுறவுக் குழு ஆகியவற்றோடு ஏனைய ஆணைக்குழுவின்கீழ் இயங்கிவரக்கூடிய பொதுநிலையினர் பணிக்குழுக்களான மறைமாவட்ட முதியோர் சங்கம், மறைமாவட்ட இளைஞர் சங்கம், மறைமாவட்ட மறையாசிரியர், கத்தோலிக்க ஆசிரியர் சங்கம், மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம் ஆகிய அனைத்துப் பணிக்குழுக்களும் தம் பணிசார்ந்த அறிக்கையினை காணொளிக் காட்சிவழியாகத் தெளிவுபடுத்தினார்கள்.

மறைமாவட்டத்திலே இன்று குடும்பங்கள், பொதுநிலையினர் சந்திக்கும் பிரச்சினைகள், சவால்கள் ஆகியவற்றை ஆயர்கள் குழு பிரதிநிதிகளிடமிருந்து கேட்டுக்கொண்டபோது அரசியல், சமயம் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி இடம்பெறவுள்ள தேசிய தூய யோசப்வாஸ் தினத்திற்கான ஒரு சிறப்பு இணையத்தளம், மன்னார் குடும்பநலப் பொதுநிலையினர் மண்டபத்திலே ஆயரவர்களினால் ஆரம்பித்துவைக்கப்பட்டதும் இன்னுமொரு சிறப்பம்சமாகும்.

வருகைதந்த ஆயர் குழுவினர் தமது பாராட்டுக்களையும் ஆசீரையும் மன்னார் குடும்பநல பொதுநிலையினர் பணி மையத்திற்கு வழங்கி கௌரவித்த பின்னர், ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி முள்ளிக்குளம் கிராமம் சென்று மக்களது குறைபாடுகளையும், சொந்த மண்ணில் வாழமுடியாத நிலையையும், இதனால் ஏற்படுகின்ற வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் நேரில் கண்டறிந்தனர். கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் தம் கிராமம் தொடர்ந்து இருப்பதால் தமது சாதாரண இயல்பு வாழ்வை வாழமுடியாமலிருக்கும் துர்ப்பாக்கிய நிலையை மிகுந்த கண்ணீரோடும் ஆதங்கத்தோடும் ஆணைக்குழுவினரிடம் கிராம மக்கள் தெரியப்படுத்தினர். வருகைதந்திருந்த கத்தோலிக்க தேசிய வழங்கறிஞர் குழு இப்பிரச்சினைக்கு தம்மாலான முயற்சியெடுக்கப்போவதாக முன்வந்தனர். ஆயர் மன்ற அமர்வின்போதும், ஜனாதிபதியை ஆயர் மன்றமாகச் சந்திக்கும்போதும் இப்பிரச்சினையை முன்வைக்கப்போவதாக தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுத் தலைவர் மேதகு நோபேட் அன்றாடி ஆண்டகை தெரிவித்தார்.

இக்கூட்டத்தொடரின் அனைத்து ஏற்பாட்டு ஒருங்கமைப்புக்களை மன்னார் மறைமாவட்ட குடும்பநலப் பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்பணி. S. K. தேவராஜா அவர்கள் செயற்குழு உறுப்பினர்களின் மேலான ஒத்துழைப்புடன் சிறப்புற ஏற்பாடு செய்திருந்தார். இத்தேசிய நிகழ்வு வெற்றிகரமாக நிறைவுற, தமது மன்னார் மறைமாவட்டத் தரிசிப்புப் பணியை மகிழ்வுடன் நிறைவுசெய்துகொண்டு தேசியக் குழுவினர் பிரியாவிடை பெற்றுச்சென்றனர்.

## தூய யோசவ்வாஸ் ஆண்டையொட்டி மன்னார் பேராலயத்தில் கண்காட்சி

### *பலர் பார்வையிட்டு பயனடைந்தனர்!*








தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி. பெப்பி சோசை அடிகளாரின் வழிகாட்டலில் பேராலய அருட்பணிப் பேரவையின் கலைக்குழுவும் திருச்சபை வளர்ச்சிக்குழுவும் இணைந்து ஒழுங்குசெய்த "தூய யோசவ்வாசின் வாழ்வும் பணியும்" என்ற தொனிப்பொருளிலாலான கண்காட்சி நிகழ்வு கடந்த ஓகஸ்ட் 1ஆம் திகதி ஞாயிறு காலை 7.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை பேராலயத்தின் இயேசுவே ஆண்டவர் மண்டபத்தில் நடைபெற்றது.

ஏற்கனவே தூய யோசவ்வாஸ் ஆண்டினை முன்னிட்டு தூய யோசவ்வாஸ் தேசிய திருத்தலங்களுக்கான திருயாத்திரைகள், பாதயாத்திரைகள், நாட்டுக்கூத்து, நாடக நிகழ்வுகள், கருத்தமர்வுகள் எனப் பல பணித்திட்டங்களை முன்னெடுத்த பேராலயப் பங்கு தனது அடுத்த முயற்சியாக இக்காண்காட்சியினை பிரமாண்டமாக முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

அருட்சகோதர் றெஜினோல்ட் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் திருக்குடும்ப மன்னார் கன்னியர்மட குழுத்தலைவி அருட்சகோதரி பற்றிசியா அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். சிலாபம் மறை மாவட்டத்திலிருந்து வருகைதந்த 500 சகோதர மொழி கத்தோலிக்கர்கள் உள்ளிட்ட சுமார் 5000 மக்கள் பார்வையிட்டுச் சென்ற இக்கண்காட்சியில் 20 குழுக்கள் பங்கெடுத்திருந்தன. பிரமாண்ட பதாதைகளைக் காட்சிப்படுத்தல், உருவப் பொம்மைகள் காட்சிப்படுத்தல், போலச்செய்தல்முறை, வினாவிடைப் போட்டிகள், காணொளிக் குறும்படங்கள், மாதிரி வடிவமைப்புகள் எனப் பல நுட்பங்கள் இக்கண்காட்சியில் பயன்படுத்தப்பட்டிருந்தமை பாராட்டுக்குரியதாகும்.

## மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கான பிறப்பு, இறப்பு, விவாகத்திற்கான புதிய பதிவாளர் நியமனம்



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கான பிறப்பு, இறப்பு, விவாகத்திற்கான புதிய பதிவாளராக திருமதி. பிறேமிலா சத்தியலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த செப்ரம்பர் மாதம் 20ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து வைபவரீதியாக தன் பணியினைப் பொறுப்பெடுத்துக் கொண்டார். இவர் 14.09.2017 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் கொழும்பு அலரிமாளிகையில் பிரதமர் றணில் விக்கிரமசிங்க அவர்களினால் அரச நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவர் மாந்தை மேற்கு அடம்பன் கிராமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். மன்/ அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியும் ஆவார். இவர் அடம்பனைச் சேர்ந்த மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 1988ஆம் ஆண்டு முதல் 20.09.2017 ஆம் திகதி வரை பதவி வகித்து ஓய்வு பெற்ற பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் திரு. செபஸ்தியாம்பிள்ளை செபமாலை இராஜசிங்கம் அவர்களின் மூத்த மகளும் மன்னார் மாவட்ட யதீஸ் மாணவர் தொண்டு நிறுவனத்தின் பணிப்பாளர் திரு. S.R. யதீஸ் அவர்களின் சகோதரியும் ஆவார்.

## மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆயர் யோசேப்பு ஆண்டகை அவர்கள் மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக நியமிக்கப்பட்டார். மன்னார் மறைமாவட்டத்தின் பல்துறை சார்ந்த வளர்ச்சியில் அவர் அதிக ஈடுபாட்டோடு உழைத்தார். மக்களின் விசுவாச வாழ்வைக் கட்டியெழுப்புவதிலும் குருக்கள் துறவியரின் நலனிலும் அதிக அக்கறையோடு செயலாற்றினார். இலங்கை நாட்டில் குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் போர் உச்ச நிலையை எய்தியிருந்த காலப்பகுதியில் மக்கள் சார்பாக அவர்களின் உரிமைகள், துன்பங்கள் தொடர்பாக குரல் எழுப்பினார். இதனால் பல்வேறு ஆபத்துக்களையும் அவர் அந்நாட்களில் எதிர்நோக்கியிருந்தார்.

இந்த வகையில் அவருடைய பணிக்காலம் ஈழத்துத் தமிழ் மக்களுக்கும் குறிப்பாக மன்னார் மறைமாவட்ட மக்களுக்கும் சிறப்பான காலமாக அமைந்திருந்தது. அவர் மூலமாக இறைவன் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறுவோம். அவருக்கு இறைவன் நல்ல உடல், உள, ஆன்மீக நலன்களைப் பொழியவேண்டுமென செபிக்கின்றேன்.

## மன்னார் மறைமாவட்ட குருமுதல்வரின் .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

மன்னார் மறைமாவட்டத்தின் ஆன்மீக மற்றும் மேய்ப்புப்பணி சார்ந்த வளர்ச்சிக்காக வருடாந்தம் மேய்ப்புப்பணி மாநாடுகளைக் கூட்டினார்.

ஏழைகள்பால் மிகுந்த கரிசனைகொண்டு அவர்களுக்கான பல்வேறு திட்டங்களை புதிதாக உருவாக்கி அவற்றை ஆயர் இல்லத்தின் மூலம் செயற்படுத்தினார்.

ஆயர் அவர்கள் காலத்தின் தேவை உணர்ந்து போர்ச் சூழலில் எவ்வாறானதொரு தலைமைத்துவத்தை வழங்கினார் என்பதை நாம் அறிவோம். தமிழ் மக்களின் துயரங்களை எங்கெல்லாம் எடுத்துச்செல்ல வேண்டுமோ அங்கெல்லாம் எடுத்துச்சென்றார். எதிர்பாராத அவருடைய திடீர் சுகவீனம் எம் எல்லோருக்கும் அதிர்ச்சியை, கவலையை ஏற்படுத்தியது.

அவர் காட்டிய பாதையில், அவரிடம் விளங்கிய மேய்ப்புப்பணி ஆர்வம், மக்கள் நலன் சார்ந்த அக்கறை போன்றவற்றை நமதாக்கி நாமும் தொடர்ந்து நடைபயில்வோம். ஆயர் அவர்களின் ஓய்வுக் காலம் அமைதியும் மகிழ்வும் நிறைந்ததாக அமைய இறையாசீர் வேண்டுகிறேன்.

**மன்னார் மறைமாவட்டச் செய்திகள்**

# திருப்பாலத்துவ சபை தேசியக் கருத்தரங்கில் மன்னார் குருக்கள் துறவியர் பங்கேற்பு



இலங்கையில் உள்ள திருப்பாலத்துவ சபை ஒருங்கிணைப்பாளர்களுக்கான தேசிய ரீதியிலான கருத்தரங்கு கடந்த செப்ரம்பர் மாதம் 4, 5 மற்றும் 6 ஆகிய திகதிகளில் கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் 103 அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் பல மறைமாவட்டங்களிலிருந்து வருகை தந்து கலந்துகொண்டிருந்தனர். இந்த கருத்தரங்கை திருப்பாலத்துவ சபையின் தேசிய இயக்குனர் அருட்பணி. பெசில் ரொகான் பெர்னாண்டோ அவர்கள் ஒருங்கிணைத்து வழிநடத்தினார். இந்த கருத்தரங்கின்போது பாப்பரசரின் பிரதிநிதியினுடைய செய்தியினை அருட்பணி. ஜோன் மரிய சுன் ஜீன் சொங் அவர்கள் வழங்கி இந்நிகழ்ச்சியை வைபவ ரீதியாகத் தொடங்கிவைத்தார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)



# அருட்சகோதரர் எஸ். சந்தியோகு அவர்களுக்கு வங்காலையில் சேவை நலன் பாராட்டு

வங்காலை மன்/ புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த ஆறு வருடங்கள் அதிபராக அரும்பணியாற்றி கல்முனை பற்றிமா கார்மேல் தேசிய பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் அதிபர் டிலாசால் சபை அருட்சகோதரர் செபமாலை சந்தியாகு (F.S.C) அவர்களைப் பாராட்டி நன்றி கூறும் நிகழ்வு வங்காலை ஆலயத்திலும் பாடசாலையிலும் இடம்பெற்றது.

## வங்காலைப் பாடசாலையில்




அருட்சகோதரர் சந்தியோகு அவர்களுக்கான சேவைநலன் பாராட்டு விழா கடந்த செப்ரம்பர் மாதம் 08ஆம் திகதி அன்று வங்காலை மன் /புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பாடசாலை பழைய மாணவர்கள் ஆகியோர் இணைந்து இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தனர்.

இதில் மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர், நானாட்டான் கோட்டக்கல்விப் பணிப்பாளர், வங்காலைப் பங்குத்தந்தை, முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி உத்தியோகத்தர் எனப் பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்து உரையாற்றினார்கள்.

அதிபர் அருட்சகோதரர் சந்தியோகு அவர்கள் மன்னாரில் பல வருடங்களாகக் கல்விப்பணி, ஆன்மீகப் பணி, உருவாக்கல்பணி என்பவற்றில் ஈடுபட்டுழைக்கும் ஒருவராவார். இவர் கலைமாணி, கல்விமாணிப் பட்டங்களைப் பெற்று அதிபர் தரத்தில் இருப்பவர். இவர் மன்னார் மண்ணின் பெரும் சொத்து. சிறந்த ஆளுமையும், ஒழுக்க விழுமியமும் நிறைந்தவர். அனைவருடனும் அன்புடன் பழகி சிறப்பான மனித நேயப் பண்புகளைக் கட்டியெழுப்பியவர். ஏழ்மை, பக்தி, நேர்மை போன்ற நல்ல பண்புகளைக் கொண்டவர். பாடசாலையின் மனிதவளம், பௌதீகவளம், மாணவர் அடைவு மட்டங்களை நல்ல நிலையில் பேணியவர். விளையாட்டில் தேசிய மட்டம் வரையில் பாடசாலை சாதனை படைக்கச் செய்தவர். அவரை உரமிட்டு உருவாக்கிய புனித டிலாசால் துறவறசபை சகோதரர்களை நன்றியோடு இவ்வேளையில் நினைக்கின்றோம். எமது அருட்சகோதரர் அவர்கள் செல்லுமிடமெங்கும் பல பணிகளைச் சிறப்பாக ஆற்ற இறைவன் அவருக்கு நிறைவான உடல், உள, ஆன்மீக நலன்களைப் பொழிய வேண்டும் என ஆசித்து நிற்கின்றோம். அவரது பிரிவு அடுத்த இலக்கு நோக்கிய பயணமாய் அமையட்டும்.

கல்லூரிச் சமூகம் சார்பாக,

**தகவல் :** திருமதி. A.A. அமுதினி டபரேரா, ஆசிரியர்,
மன்/ புனித ஆனாள் ம.ம.வித்தியாலயம், வங்காலை.

## வங்காலை ஆலயத்தில்



அருட்சகோதரர் சந்தியாகு அவர்களுக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வு கடந்த செப்ரம்பர் மாதம் 03ஆம் திகதி ஞாயிறு காலை 6.15 மணித் திருப்பலியைத் தொடர்ந்து வங்காலை புனித ஆனாள் ஆலய முன்றலில் பங்குத்தந்தை எஸ். ஜெயபாலன் அடிகள் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

விழாவில் தலைமை உரையாற்றிய பங்குத்தந்தை உட்பட முன்னாள் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். ஆபேல் றெவல், தற்போதைய வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. சுகந்தி செபஸ்ரியன் ஆகியோர் அருட்சகோதரரின் அர்ப்பணிப்பான சேவை, மாணவர்கள் மட்டிலான உயர் அக்கறை, சக ஆசிரியர்கள் பாடசாலை மட்ட அமைப்புக்களுடான சிறந்த தொடர்பாடல் முறைகள், அதிகாரிகள் அரசியல் பிரமுகர்களுடான பண்பான அணுகுமுறைகள் போன்றவற்றை எடுத்துக்காட்டி சிலாகித்து உரையாற்றினர். அவருடைய இயல்பான பண்புநிறை சுபாவம் தனது கடந்தகால பாடசாலைக் கடமைகளை மிகவும் வெற்றிகரமாகக் கொண்டுசெல்ல உதவின என பாராட்டும் வாழ்த்துக்களும் தெரிவித்தனர். மடு வலய உதவிக்கல்வி பணிப்பாளர் திரு. யோ. ஆரோக்கியம் குரூஸ் அவர்களினால் ஆக்கம் செய்து சமர்ப்பித்த வாழ்த்துப்பா அனைவரையும் கண் கலங்க வைத்தது.

விழா நாயகன் அருட்சகோதரர் சந்தியோகு அவர்கள் அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார். மன்னார், அடம்பன், நானாட்டான் டிலாசால் இல்லங்களின் அருட்சகோதரர்களின் பிரசன்னத்தில் இவ்விழா இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எமது மன்னார் மண் பறப்பாங்கண்டலைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரர் அவர்கள் பொறுப்பெடுத்துள்ள கல்முனை பற்றிமா கார்மேல் தேசிய பாடசாலை பல கல்விமான்களை கிழக்கில் உருவாக்கிய பாடசாலையாகும். பிரபலமான இக்கல்லூரியின் முதல்வராக பொறுப்பேற்கும் அருட்சகோதரரின் பணி வாழ்வு சீரும் சிறப்புமாக அமைந்து எமது மன்னார் மண்ணுக்கு புகழ் சேர்க்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**தகவல்:** S. சூசைநாயகம் றெவல் (JP),
செயலாளர், ஆலய அருட்பணி பேரவை, வங்காலை.

# மறைக்கல்வி நிலையச் செய்திகள்

## 1. தேசிய மறைக்கல்வி தினம் (வாரம்) புரட்டாதி 17 - 24

கடந்த புரட்டாதி 17ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை மன்னார் மறைமாவட்டப் பங்குகளில் மறைக்கல்வி வாரம் அனுஸ்டிக்கப்பட்டது. புரட்டாதி 24ஆம் திகதி ஞாயிறு மறைக்கல்வி ஞாயிறாகக் கொண்டாடப்பட்டது.

## 2. மறைக்கல்வித் தேர்வு – கார்த்திகை 3ஆம் திகதி

இவ்வருடமும் மறைக்கல்வித்தேர்வு கார்த்திகை 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து 12 மணிவரை மன்னார் மறைமாவட்டத்திலுள்ள மன்னார், மடு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு ஆகிய 4 கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் நடைபெறும். ஏறக்குறைய 160 பாடசாலைகளிலுள்ள 12,000 மாணவர்கள் (தரம் 3-11 வரை) இத்தேர்வுக்குத் தோற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 3. மறையாசிரியர் டிப்ளோமாத் தேர்வு – கார்த்திகை 18

தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் வருடாவருடம் நடாத்தப்படுகின்ற மேற்படித் தேர்வு கார்த்திகை மாதம் 18ஆம் திகதி மறைமாவட்டத்திலுள்ள மன்னார், ஆட்காட்டிவெளி, முருங்கன், வவுனியா ஆகிய 4 தேர்வு நிலையங்களில்
காலை 9.00 – 12.00 மணிவரை 1ம் வினாத்தாளும்
பிற்பகல் 1.00 – 4.00 வரை 2ம் வினாத்தாளும் நடைபெறும்.
மறையாசிரியர் முதல் தேர்வுக்கு – 54 பேரும்
மறையாசிரியர் இடைநிலைத் தேர்வுக்கு – 56 பேரும்
மறையாசிரியர் இறுதித்தேர்வுக்கு – 20 பேரும்
மொத்தம் 130 பேர் தோற்றவுள்ளனர்.
தேர்வுக்கான அனுமதிப்பத்திரங்கள் உரிய நேரத்தில் அனுப்பிவைக்கப்படும்.

**தேர்வுக்குத் தோற்றுவோரின் அட்டவணை**

| தேர்வு நிலையம் | 1, | 2, | 3, | மொத்தம் |
|---|---|---|---|---|
| மன்னார் | 14, | 21, | 2, | 37 |
| முருங்கன் | 12, | 12, | 6, | 30 |
| ஆட்காட்டிவெளி | 11, | 4, | 3, | 18 |
| வவுனியா | 17, | 19, | 9, | 45 |
| மொத்தம் | 54, | 56, | 20, | 130 |

# சிறுநீலாசனைக் கிராம வீதியில் இருந்த புனித இயாகப்பர் திருச்சுருபம் உடைப்பு

மன்னார் சிறுநீலாசனைக் கிராமத்தில் உள்ள புனித இயாகப்பர் ஆலயத்திற்குச் சொந்தமான புனித இயாகப்பர் திருச்சுருபம் அடையாளம் தெரியாத நபர்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த செப்ரம்பர் மாதம் 14ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் - நொச்சிக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த சுமார் ஒன்றரையடி உயரம் கொண்ட சுருபமே உடைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக புனித இயாகப்பர் ஆலய நிர்வாக சபையினர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# ஆட்காட்டிவெளிப் பங்கில் புனித அந்தோனியார் சுருபம் உடைப்பு

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி நாயாத்துவழிப் பகுதியில் கண்ணாடிப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்த சுமார் மூன்று அடி உயரமான புனித அந்தோனியார் சுருபம் விசமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்காட்டிவெளிப் பங்குத்தந்தை அருட்திரு. டெஸ்மன் ஆஞ்சலோ தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த செப்ரம்பர் மாதம் 14ஆம் திகதி அதிகாலை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் டெஸ்மன் அடிகளார் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுபோன்ற பல சம்பவங்கள் மன்னார் மாவட்டத்தில் பரவலாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மதநம்பிக்கையாளர்களின் மனங்களைப் புண்படுத்தும் இத்தகைய செயல்களைச் செய்வோர் சட்டத்திற்குமுன் நிறுத்தப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என சமூக ஆர்வலகர்கள் தெரிவிக்கின்றனர்.

# முள்ளிக்குளம் பரலோக மாதா திருவிழா

முள்ளிக்குளம் பரலோக மாதா ஆலயத் திருவிழா கடந்த ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்றது. எழுத்தூர் பங்குத்தந்தை அருட்திரு. பி. இயேசுராஜா அடிகளார் திருவிழாத் திருப்பலியை தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். சிலாவத்துறைப் பங்குத்தந்தை தவராஜா அடிகளார் இத்திருவிழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

# மன்னார் பேராலயப் பங்கிற்கு உட்பட்ட குருசுக் கோவில் திருவிழா

மன்னார் பேராலயப் பங்கிற்கு உட்பட்ட குருசுக்கோவில் திருவிழா கடந்த செப்ரம்பர் 14ஆம் திகதி திருச்சிலுவையின் மகிமை விழா அன்று இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் விழாத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் இறுதியில் திருச்சிலுவை ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

# மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் மேதகு இரா யோசேப்பு ஆண்டகையின்

# ஆயர்த்துவ வெள்ளி விழாச் சிறப்புப் பொழிவு

## உயிராபத்துக்கள் மத்தியில் உன்னத பணிபுரிந்த யுகபுருஷர்!

**- சகோதரி மேரி மார்த்தா, கொழும்பு -**

நான் அருட்திரு. இராயப்பு யோசேப்பு அடிகளாருடன் 1977ஆம் ஆண்டு அறிமுகமானேன். அன்று தொடக்கம் எமது நட்புறவு இறையரசின் காரியங்களுக்காக வளர்ந்தது.

நான் அன்று கண்ட நடுத்தர வயதுடைய ஆர். யோசேப்பு அடிகளார் ஆழமான சிந்தனைகொண்ட, அமைதியான குணபாவமுடைய, தான் சரியானது எனப் புரிந்துகொண்டதை உறுதியுடன் பின்பற்றும், நிறைவேற்றும் திடமான மனம் கொண்டவராக விளங்கினார். அவர் பங்குப் பணியில் ஈடுபட்டிருந்த காலத்திலும், நாட்டுப்பிரச்சினையினால் பங்கு ஆலயத்திற்கு, பங்கு மக்களுக்கு பலவிதமான பிரச்சினைகள் இருந்ததை நான் அறிவேன். எனினும் ஆர். யோசேப்பு அடிகளார் பெற்ற ஆயர் அபிஷேகத்துடன், விஷேசமான திருக்கொடையான இறைவாக்காளர் அழைப்பை பெற்றுள்ளாரெனக் கண்டேன். பழைய ஏற்பாட்டில் இருப்பதுபோல், இறைமக்களுக்காக இறைவனின் குரலொலியானார் என்பதை காலப்போக்கில் கண்டேன். தன் இறைவாக்காளர் பணியை அதிகாரபூர்வ உரிமையுடன் மன்னார் மறைமாவட்டத்தில் நிறைவேற்றியதைக் கண்டு நான் இறைத்தந்தைக்கு நன்றி கூறியதுண்டு.

ஆட்சியில் இருக்கும் அதிகாரமிக்கவர்களின் அதிகாரத்திற்கு அகப்பட்டு, மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்தாலும் காரணம் கேட்க முடியாத நிலையில் மக்கள் தவிக்கும்போது தவிக்கும் மக்களின் குரலொலியாக ஆயர் யோசேப்பு ஆண்டகை செயற்பட்டார்; மக்களின் மனக்குமுறலை வெளிக்கொணர்ந்தார். அதிகார பலத்துடன் இருக்கும் அரசிடம் வட கிழக்கு மக்களுக்காக நீதி கேட்டுப் போராடினார். அதைச் சர்வதேச மனித உரிமை கவுன்சில்வரை கொண்டுசென்றார். இதன் விளைவாகத் தனக்கு என்ன நேருமென்பதையிட்டு அவர் துளியேனும் அஞ்சினாரில்லை. மக்களின் சொல்லொண்ணாத் துயர்துடைக்க மிகமிக அபாயகரமான பயணங்களை மேற்கொண்டார். ஆண்டவர் நல்லாயனாக நின்று இருள்சூழ்ந்த பள்ளத்தாக்கிலும், மரண இருளின் நிழலிருந்தும் அவரைப் பாதுகாத்தார். போர் நடக்கும்போதும், இறுதி யுத்தம் முடிவுற்ற வேளையிலும், அவர் கொடுத்த நேர்க்காணல்கள் BBC போன்ற ஊடகங்களுக்கு அவர் கொடுத்த செவ்விகளைப் பார்க்கும், கேட்கும் நேரங்களில் எனக்குள் பயமேற்பட்டது. அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடிய நிலையில், அரசாங்கத்தினர், ஆயுதப்படையினர் அவருக்கு ஏதும் ஆபத்து விளைவிப்பார்களோ என அச்சம் கொண்டேன்.

நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு அவர் அளித்த சாட்சியம், ஐக்கிய நாடுகள் சபைக்கு அவர் எழுதிய கடிதங்கள், நீதிக்காக அவரில் இருந்த திடனான உறுதியான மனத்தை வெளிப்படுத்தியது. தம் மக்களின் நீதி நியாயமான உரிமைகளுக்காகத் தன் உயிரைக் கொடுக்கவும் ஆயத்தமாக இருந்ததைப்போலவே தெரிந்தது.

இறுதிப் போரின்போது காணாமல் ஆக்கப்பட்டவர், உயிரிழந்தோர், குடிபெயர்ந்தோர், அகதி முகாம்களில் முடக்கப்பட்டவர்பற்றி தெளிவான எண்ணிக்கையுடன் புள்ளி விவரங்களை அவர் கொடுத்தபோது தெற்கில் அவருக்கெதிராக போர்க்குரல் எழுப்பப்பட்டது. அவருக்கு எதிராக பலவித விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அபாய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. இவரை சிங்களத்தில் 'மஹா கொட்டியா' (பெரிய புலி) என சிங்கள அடிப்படைவாதிகள் அழைத்தனர். ''இவர்தான் பெரிய புலி. கண்ட இடத்தில் இவரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பியுங்கள்'' என சிங்களப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் எழுதினர். ஆயினும் ஆயர் அவர்கள் எவ்விதமான அச்சமுமின்றி கொழும்புக்கும் மற்ற இடங்களுக்கும் தன் பயணங்களை மேற்கொண்டார். பல பிரிவினரையும் சந்தித்து மக்களின் நிலைமைகளை விளக்கினார்.

இவ்வாறான சூழலில் தெற்கில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கத்தோலிக்கருக்குத் தலைமைத்துவத்தைக் கொடுத்த திருச்சபைத் தலைமை முற்றாக மௌனித்து நின்றது. பல இனவாதிகள் எமது நாட்டு கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைகளுக்கிடையில் பிளவை, பிரிவினையை ஏற்படுத்த முனைந்தனர். அவ்வேளையில் ஆயர் அவர்கள் சகிப்புத்தன்மையுடன் நீடிய பொறுமை காத்தார். கத்தோலிக்க திருச்சபைக்கு அவர் பிரமாணிக்கமாகவும் இருந்தார். இதன் காரணமாக கத்தோலிக்க திருச்சபையின் ஒற்றுமை கட்டிக்காக்கப்பட்டது. இவ்வகையில் பார்க்கும்போது அவர் எட்டாத உயரத்திற்கு உயரும் மாமனிதரானார். புனித பவுல் சொல்லுவதுபோல் ''நான் எல்லோருக்கும் எல்லாமானேன்'' என்ற நிலையில் அவர் செயலாற்றினார்.

துன்புறுத்தப்பட்ட மக்களுக்காக இரவு பகல் பாராது தனது காலத்தைச் செலவிட்டு நீதிக்காகக் குரலெழுப்பினார். இவ்வாறான ஒரு ஆன்மீகத் தலைவர் ஒருவர் இதுவரை இருக்கவில்லை; இனி எதிர்காலத்தில் அவ்வாறான அழைப்புள்ள ஒருவர் வருவாரா? என்பதைக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். தைரியமிக்க ஒரு தலைவர் நமக்கு முன்னால் நிற்கிறார் என்பதே எமக்கு மிகுந்த தைரியமாகவும், பெருமிதமாகவும் இருந்தது. இறைவனிடமிருந்து இக்காலகட்டத்திற்கு பெற்ற அழைப்பை செவ்வனே நிறைவேற்றிய செம்மலுக்கு எமது தாழ்மையான வணக்கங்கள்! அவர் மனிதர்களுக்குள் மாமனிதர் மாத்திரமல்ல, அச்சமென்பது அண்டாத இந்த யுகத்திற்கான யுகபுருஷராவார்.



துன்புற்ற மக்களைத்
தேடிச்சென்ற
கால்கள் இன்று
ஓய்ந்து கிடக்கின்றன.

அன்புக்கரம் நீட்டி
ஆதரவு வழங்கிய
கைகள் இன்று
சோர்ந்து
கிடக்கின்றன.

குரலற்ற
மக்களுக்காக
குரல் கொடுத்த
வாய் இன்று
மௌனித்துக்
கிடக்கின்றது.

## நெஞ்சம் மறப்பதில்லை, நினைவுகள் அழிவதில்லை!

**- திருமதி. அகத்தா குருஸ், மன்னார் -**

மன்னார் மறைமாவட்டத்தின் கத்தோலிக்க மக்களாகிய எமது நல்லாயனாக எம்மையெல்லாம் பாதுகாத்துவந்த எமது அன்புக்கும், பாசத்திற்குமுரிய எம் தந்தை ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை இன்று அமைதியில் ஓய்வெடுக்கின்றார். பல வருடங்களாக நடந்த உக்கிரமான போரினால் உயிரை இழந்து, உடமை இழந்து, இருக்க இல்லிடமற்று, என்ன செய்வோம்? ஏது செய்வோம்? என்று நடைபிணங்களாக, வாழ வழிதெரியாமல் அலைந்து திரிந்த மக்களுக்காக மன வேதனையுடன் ஓங்கி ஒலித்த குரல் அவருடைய குரல்! இன்று யாருமே நினையாத வேளையில் அந்தக் குரல் ஓய்வாகிப் போனது.

இன்னும் எத்தனையோ ஆண்டுகள் எம்மோடு இருந்து, எம் மக்களின் இன்னல்களில், தேவைப்படும் நேரங்களில் எம் ஆயர் எம்மண்டை நிற்பார் என்ற ஆசை எல்லாம் நிராசையாய் ஆகியது. அல்லலுற்ற மக்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகள் தலைதூக்கியபோதெல்லாம் உடனடியாக சென்று உரியவரோடு கதைத்து, வாதாடி ஏதாவதொரு முடிவுடனேயே வெளியேவரும் துணிச்சல் மிக்கவர் அவர். எம் இனத்தோடு பயணம் செய்த அவரைத் திடீரென ஒருநாள் இறைவன் அமைதியில் ஆழச் செய்யச் சித்தம் கொண்டார். அவர் திடீரென நோய்வாய்ப்பட்டு வீழ்ந்துவிட்டார் என்ற செய்தி கேட்ட உடனே எல்லோர் உயிரும் அதிர்ச்சியில் உறைந்தே போனது.

மக்கள் படும் துன்பங்களை உடனுக்குடன் ஓய்வின்றி, பயமின்றி தன் உயிரையும் துச்சமென மதித்து துணிவுடன் ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தினார். இதனால் அவர் பெயர் எல்லாப் பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் பிரபல்யமாகியது. அவரின் துணிச்சலான செயற்பாடுகளை அறிந்தபோது, ஊடகங்களுக்கு அவர் கொடுத்த உண்மைச் சம்பவங்களை பத்திரிகைகள், பேட்டிகள் வாயிலாக அறிந்தபோது நாம் பெருமிதமடைந்தோம். ஆனால் எதுவுமே நீடிக்காமல் பாதியிலேயே பேச்சின்றிப் போனார் எம் பெருந்தகை ஆயர்த் தந்தை!

போரின் வடுக்கள் மத்தியில் இன்றும் அலைந்து திரியும் மக்களின் அழுகுரல்கள் இன்று அவர் மனதில் வேதனையை நிச்சயம் உண்டாக்கும். ஓடிச்சென்று அவர்களுக்கு ஆறுதல் அளிக்க, அவர்களுக்காகக் குரல் கொடுக்க அவரால் இன்று முடியாது. பத்திரிகைகள், ஊடகங்கள் வாயிலாக இன்று நாம் அறியும் நம்மினத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாக நிற்கும் இக்காலங்களில் எமதன்பு ஆயரின் துணிச்சலான பேட்டிகள் ஓங்கி ஒலித்த நேரங்கள், பல்நாட்டுத் தலைவர்களை, முக்கியஸ்தர்களைச் சந்தித்து எம்மவரின் இன்னல்களை எடுத்துக்கூறிய பயணங்கள் எல்லாம் எம் மனத்திரையில் அவரை என்றென்றும் நினைவூட்டிக்கொண்டே இருக்கும்.

அவர் உயிரைச் துச்சமென நினைத்து, துணிவுடன் சென்ற நேரங்களில் ஒன்று பேசாலைப் பங்கில் பெரும் பதற்றம் ஏற்பட்ட ஒரு நேரம். அவ்வேளையில் எங்கும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுக்கொண்டு இருந்தவேளையில் அச்சமின்றி அம்மக்களைக் காப்பாற்ற ஓடோடிச் சென்றார். இப்படியாக பல உயிராபத்தைத் தாண்டி அவர் வந்தார்.

துன்புறும் மக்களுக்காக ஓய்வின்றி ஒலித்த எம் ஆயரின் குரல் இன்று அமைதியோடு ஒன்றித்துவிட்டது. அவரை நாம் நினைக்கும் நேரங்களில் ஒன்று திருப்பலிப்பூசை வேளை. மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் அவர் பங்கேற்கும் ஒவ்வோர் பலிப்பூசை வேளையிலும் நற்கருணை எழுந்தேற்ற வேளையில் அவர் பாடும் ''அருமருந்தொன்றுண்டு'' என்ற அழகிய பாடல் எப்போதும் அவரை நினைவூட்டும்! ஆனால் இன்று எம்மால் அந்தப் பாடலைக் கேட்க முடியாமற் போயிற்று. அவர் பாடிய முதல் நாட்களில் நாம் ஒருவர் ஒருவரைப் பார்த்து சிரித்த நாட்களுமுண்டு. ஆனால் காலச்சுழற்சியில் அதன் அர்த்தம், ஆழம் மனதைத் தொட்டதைப் பகிர்ந்துகொண்டவர்கள் ஏராளம். எம் ஆயர் பெருந்தகையை என்றுமே எம் நெஞ்சம் மறப்பதில்லை!

## இறைவனுடன் இணைந்த விடுதலை வீரர் நீங்கள்

**அருள்திரு. பா. அருள்ராஜ், மெதடிஸ்த திருஅவை, வத்தளை.**

ஆண்டவர் இயேசுவின் பணியை தன்னகத்தே கொண்டவராக, கடவுளால் அழைப்புப் பெற்றவராக, பெரும் இறைபணியாளராகச் செயற்பட்டு ஆயர்த்துவ வாழ்வில் 25 ஆண்டுகள் நிறைவுகாணும் மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களுக்காக கடவுளுக்கு நன்றி சொல்கின்றேன்.

ஓய்வுபெற்று ஆயர்த்துவப் பணியில் வெள்ளிவிழாக் காணும் மக்களின் குரலே உங்களை வாழ்த்துகிறேன். மன்னார் மெதடிஸ்த திருஅவையில் நான் பணியாற்றிய காலத்திலே உங்கள் பணிகளை அருகில், நேரில் இருந்து பார்த்தேன். உங்கள் பணியின் தாகத்தை நேரில் கண்டு உணர்ந்தேன். நீங்கள் துணிச்சல் கொண்ட ஒரு சமூகப்பணியாளர் என்பதை அறிந்தேன்.

முருங்கன் ஜீவோதயத்தை ஆரம்பித்த மெதடிஸ்த திருச்சபையின் பணியாளர் அருட்திரு. ஜோர்ச் ஜெயராஜசிங்கம் அவர்கள்பற்றி நீங்கள் உயர்ந்த எண்ணத்தைக் கொண்டிருந்தீர்கள். அவரைப்பற்றி நீங்கள் என்னுடன் பகிர்ந்துகொண்டதை நான் எண்ணிப் பார்க்கிறேன். துன்புறும் மக்களின் துயர் துடைப்புப் பணியில் தன்னை ஈடுபடுத்தி இராணுவத்தால் கொலைசெய்யப்பட்ட அவர் மட்டில் நீங்கள் மிகுந்த மதிப்பு வைத்திருந்தீர்கள். ''போதகர் ஜெயராஜசிங்கம் என் நெஞ்சில் வாழ்கிறார்'' என்ற உங்கள் வார்த்தைகள் இன்றும் என் நெஞ்சில் ஒலிக்கிறது.

இதனைக் கேட்ட அந்த நாள் முதல் என் உள்ளத்தில் ஓர் தெளிவை நான் உணர்ந்தேன். அதாவது நீங்கள் இறுதி மூச்சுவரை உங்கள் மறைமாவட்டத் திருப்பணியில் மாத்திரமல்ல சமூகப் பணியிலும், மக்களின் விடுதலை பணியிலும் பங்கெடுப்பீர்கள் என்ற தெளிவை நான் பெற்றிருந்தேன்.

மக்களுக்காகக் குரல் கொடுத்தபோதெல்லாம் உங்களுக்கு அச்சுறுத்தல்கள், கொலைமிரட்டல்கள் வந்தன. அவற்றையெல்லாம் நீங்கள் ஒரு பொருட்டாக எண்ணாது துன்புறும் மக்களுக்காக இறப்பது மேலானது என்றீர்கள்.

இறுதி யுத்தத்தில் காயப்பட்ட மக்களையும், மண்ணில் புதையுண்டு கிடந்த மக்களையும் மன்னார் வைத்தியசாலையில் கண்டு அவர்களின் பரிதாப நிலையை அறிந்து மனம் கசிந்தீர்கள். ''காயம் கட்டும் ஆண்டவர்தாமே இவர்களை விரைவாகச் சுகப்படுத்துவீராக'' என்று கேட்டுக்கொண்ட உங்களின் அந்தக் குரல் இப்போதும் என் காதுகளில் ஒலிக்கிறது.

இறைவனில் வாழ்பவர்கள் நிச்சயமாகத் துன்பங்களைச் சந்திப்பர். இறைவனுடன் வாழ்ந்தபடியால் நீங்கள் துன்பங்களைச் சந்தித்துக்கொண்டே இருக்கிறீர்கள். ஓய்வுபெற்ற அமைதி வாழ்வில் கடவுளுடன் இருந்துகொண்டு துன்புறும் மக்களுடன் இறைவனை இணைக்கின்றீர்கள்.

''நாம் மக்களுடைய பிரச்சினைகளை அறிய அவர்களோடு வாழவேண்டும். அவைகளைத் தீர்க்க இறைவனோடு இருக்க வேண்டும்'' என்றார் பீட்டர் ஜோர்ஜ்சித் என்ற இறைமனிதர். அவர் கூறிய இந்த வார்த்தைக்கு உரித்தானவராக நீங்கள் வாழ்ந்தீர்கள். தமிழர்களின் வாழ்வின் இறைவனுடன் இணைந்த ஒரு விடுதலை வீரர் நீங்கள். இன்று இலங்கைத் தமிழர் எங்கும் ஓரளவு சுதந்திரத்துடன் வாழ்கின்றார்கள் என்றால் அதில் உங்கள் பங்கும் பணியும் நிச்சயம் உண்டு. தமிழ் மக்களுக்காக, அவர்களின் உரிமைகளுக்காக இனி யார் குரல் கொடுப்பார் என்ற கேள்வி இன்று தமிழர்களிடம் உண்டு. உங்களுடைய தியாகப் பணி இந்த மண்ணுக்கு வேண்டும். உங்கள் வழியில் தியாக மனநிலையுடன் பணிசெய்ய பல திருப்பணியாளர்கள் வேண்டும். பலர் இன்று மௌனிகளாக இருக்கும் சூழலில் உங்களை நினைக்கின்றோம். தமிழர்களின் பிரச்சினையை இன்று உலகுவரை எடுத்துக்கொண்டு செல்ல யாருமில்லை. அப்படிப்பட்ட ஒருவரை கடவுள் ஆயத்தம் செய்துகொண்டு வருவார் என்று காத்திருக்கிறோம்.

# தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு

## மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் 'கலையருவி'யின் ஏற்பாட்டில் இடம்பெற்ற

# பேச்சுப் போட்டி முடிவுகள்

தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டச் சமூகத் தொடர்பு அருட்பணி மையம் 'கலையருவி'யின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி கடந்த செப்ரம்பர் மாதம் 30ஆம் திகதி மன்/ புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இப்போட்டி நான்கு பிரிவுகளாக இடம்பெற்றது.

"மறைகாத்த மாவீரன்" என்ற தலைப்பே அனைத்துப் பிரிவினருக்குமான தலைப்பாக இந்தப் பேச்சுப் போட்டியில் அமைந்திருந்தது.

3ஆம், 4ஆம், 5ஆம் தரங்கள் - பிரிவு I. 6ஆம், 7ஆம், 8ஆம் தரங்கள் - பிரிவு II. 9ஆம், 10ஆம், 11ஆம் தரங்கள் - பிரிவு III. 12ஆம், 13ஆம் தரங்கள் பிரிவு - VI. என்ற அடிப்படையில் இப்பிரிவுகள் அமைந்திருந்தன.

I.ஆம் பிரிவில் 24 பேரும் II. ஆம் பிரிவில் 25 பேரும் III. ஆம் பிரிவில் 21 பேரும் VI. ஆம் பிரிவில் 12 பேரும் என மொத்தமாக 82 பேர் இந்தப் போட்டியில் பங்கேற்றனர். முதல் மூன்று பிரிவினருக்கும் அரை இறுதிப் போட்டி மற்றும் இறுதிப் போட்டி இடம்பெற்றது. நான்காம் பிரிவுக்கு நேரடியாகவே இறுதிப்போட்டி இடம்பெற்றது. பங்கு மட்டத்தில் போட்டிகள் வைக்கப்பட்டு அதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களே மறைமாவட்ட மட்டத்திலான இப்போட்டியில் பங்கெடுத்தனர்.

இப்போட்டிகளில் ஆர்வத்தோடு பங்கெடுத்த எல்லா மாணவர்களுக்கும் எமது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம். வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்பான பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம். இம்மாணவர்களுக்கு உற்சாகம் வழங்கி ஊக்குவித்த பங்குத்தந்தையர்கள், பயிற்சிகளை வழங்கிய பெற்றோர்கள், பங்கு மங்கு மட்டத்தில் போட்டிகளை நடாத்தி அதில் வெற்றிபெற்றவர்களை இறுதிப் போட்டிக்கு அழைத்து வந்த மறையாசிரியர்கள், கலையருவி அலுவலகப் பணியாளர்கள் என அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம். அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளுக்கு நடுவர்களாகக் கலந்து எமக்கு உதவிய அனைத்துக் குருக்கள், துறவியர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது சிறப்பான நன்றிகள்.

இப்போட்டிக் மூலமாக மாணவர்கள், பெற்றோர்கள், மறையாசிரியர்கள் எனப் பல திறத்தினரும் புனித யோசவ்வாஸ் அடிகளாரைப்பற்றி அறிந்துகொள்ள நல்ல வாய்ப்பு ஏற்பட்டதாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இப்போட்டிகளை நடத்துவதன் எமது நோக்கம் நிறைவேறிவருவது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

## பிரிவு – I

**1ம் இடம் :**
*பெயர்:*
ஜெனிங்ஸ் அபிஷானி
*பங்கு:*
மன்னார் பேராலயம்
*முகவரி:*
இல: 24/7 குழந்தை
இயேசுபுரம், மன்னார்.



**2ம் இடம் :**
*பெயர்:*
இக்னேசியஸ் தவராஜ்
மரிஸ் ஏஞ்சலின்
*பங்கு :*
நானாட்டான்
*முகவரி:*
எருவிட்டான்,
நானாட்டான்.



**3ம் இடம் :**
*பெயர்:*
றொ. டில்சிக்கா
*பங்கு:*
ஜோசப்வாஸ் நகர்
*முகவரி:*
ஜோசப்வாஸ் நகர்,
தோட்டவெளி.



**4ம் இடம் :**
*பெயர்:*
மெக்லஸ் ஆன் அஸ்மிகா
பெர்னாண்டோ
*பங்கு:*
பேசாலை
*முகவரி:*
4ம் வட்டாரம், பேசாலை



**5ம் இடம் :**
*பெயர்:*
திருமகன் லியன்சிக்கா
*பங்கு :*
மன்னார் பேராலயம்
*முகவரி:*
எமில்நகர்,
மன்னார்



## பிரிவு – II

**1ம் இடம் :**
*பெயர் :*
சூசையா அன்டன்ஸ்
டிவைனி சோசை
*பங்கு :*
வங்காலை
*முகவரி :*
4ஆம் வட்டாரம், வங்காலை



**2ம் இடம் :**
*பெயர் :*
நிக்ஷன் சுரேஸ்
மேரி நிலுக்சினி றெவல்
*பங்கு :*
மன்னார் பேராலயம்
*முகவரி :*
பனங்கட்டு கொட்டு மேற்கு
மன்னார்.



**3ம் இடம் :**
*பெயர் :*
யோகானந்தராஜா
கியோமர் ஜொய்னஸ்
*பங்கு :*
முருங்கன்
*முகவரி :*
பள்ளக்கமம், முருங்கன்.



**4ம் இடம் :**
*பெயர் :*
M. ஆன் மியூலிக்கா
*பங்கு :*
தலைமன்னார்
*முகவரி :*
மாதா கோவிலடி,
தலைமன்னார்.



**5ம் இடம் :**
*பெயர் :*
சிபியா பிரபாகரன்
*பங்கு :*
வவுனியா
*முகவரி :*
இல: 15
அன்னை திரேசா வீதி,
வவுனியா.



## பிரிவு – III

**1ம் இடம் :**
*பெயர் :*
சூ. செல்ற்றன்
மேரி லக்சியா மிராண்டா
*பங்கு :*
பேசாலை
*முகவரி :*
8ம் வட்டாரம், பேசாலை



**2ம் இடம் :**
*பெயர் :*
ஜெனிங்ஸ் ஜெனுஷா
*பங்கு :*
மன்னார் பேரலயம்
*முகவரி :*
இல: 24/7,
குழந்தை இயேசு புரம்,
மன்னார்.



**3ம் இடம் :**
*பெயர் :*
சில்வெஸ்டர் அபிஷா
டிலக்ஷினி
*பங்கு :*
தலைமன்னார்
*முகவரி :*
தலைமன்னார் பியர்



**4ம் இடம் :**
*பெயர் :*
சஞ்ஜியா வின்சன்போல்
*பங்கு :*
வவுனியா
*முகவரி :*
R.D.A விடுதி,
கண்டி வீதி, வவுனியா.



**5ம் இடம் :**
*பெயர் :*
யூட் மரியசீலன்
ஜெனி மோவிதா
*பங்கு :*
மன்னார் பேராலயம்
*முகவரி :*
எமில்நகர், மன்னார்



## பிரிவு – IV

**1ம் இடம் :**
*பெயர் :*
அ. கெலன் கிறிஸ்ரா
*பங்கு :*
ஜோசப்வாஸ் நகர்
*முகவரி :*
ஜோசப்வாஸ் நகர்,
தோட்டவெளி.




**2ம் இடம் :**
*பெயர் :*
இராஜேந்திரன்
மரிய விஜித்தா
*பங்கு :*
தலைமன்னார்.
*முகவரி :*
தலைமன்னார் பியர்,
தலைமன்னார்.



**3ம் இடம் :**
*பெயர் :*
நிக்ஷன் நிதுர்ஷன்
லெம்பேட்
*பங்கு :*
வங்காலை
*முகவரி :*
ஆனாள் நகர்,
வங்காலை.



**4ம் இடம் :**
*பெயர் :*
நிறோஜா அன்ரன்
மகேந்திரன்
*பங்கு :*
கோமரசன்குளம்
*முகவரி :*
பெரிய கோமரசன்குளம்,
வவுனியா.



**5ம் இடம் :**
*பெயர் :*
சசிக்குமார் சரண்யா
*பங்கு :*
மன்னார் பேராலயம்
*முகவரி :*
பனங்கட்டுக் கொட்டு
மேற்கு, மன்னார்.



# தேசிய மட்டத்தில் சாதனை!

மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் கல்வி பயிலும் செல்வி. செபஸ்ரியான் ஆன் றொஸ்லின் டயஸ் அவர்கள் அகில இலங்கைத் தமிழ் மொழித்தின தேசியநிலை இறுதிப் போட்டியில் பிரிவு 4இல் பாவோதல் எனும் நிகழ்வில் 2ம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவர் தாழ்வுபாட்டுப் பங்கைச் சேர்ந்தவராவார். இவரைத் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட், அதிபர் அருட்சகோதரி கில்டா சிங்கராயர், பொறுப்பாசிரியர் திருமதி. சுசிலா யஸ்ரின் மற்றும் பாடசாலை சமூகம் வாழ்த்தி நிற்கின்றது.



# இறையியலில் சிறப்புத் தேர்ச்சி


யாழ்ப்பாணம் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்ற மன்னார் மறைமாவட்டத்தின் விடத்தல்தீவு பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர் வேதநாயகம் றஞ்சன் சேவியர் தனது இறையியல் பாடநெறியின் இறையியல்மாணிப் பட்டத்திற்கான இறுதிப்பரீட்சையில் அதிஉயர் புள்ளிகளைப் பெற்றுச் சாதனை புரிந்துள்ளார்.

இவர் 97.32 புள்ளிகளைப் பெற்று Summa cum Laude எனும் முதற்தர சித்தியைப் பெற்றுள்ளார். இப்பட்டமானது உரோமையில் அமைந்துள்ள ஊர்பானியானா பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுவதோடு இப்பரீட்சைக்கான விடைத்தாள்கள் அதே பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டு புள்ளிகள் வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஏற்கனவே கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் தனது மெய்யியல்மாணிப் பட்டப் பரீட்சையிலும் 96.46 புள்ளிகளைப் பெற்று இதே சிறப்புத் தேர்ச்சியைப் பெற்றிருந்தார்.

இவரது இந்தச் சாதனைக்காக இறைவனைப் புகழ்வதோடு தனது கிராமத்திற்கும், மறைமாவட்டத்திற்கும் பெருமை சேர்த்த இவரை மன்னார் மறைமாவட்ட சமூகம் சார்பாக மன்னா மனமாரப் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றது. இவரின் அழைத்தல் வாழ்வு சிறக்க இறைவனிடம் வேண்டி நிற்கின்றது.



# மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் மேதகு இரா யோசேப்பு ஆண்டகையின்
# ஆயர்த்துவ வெள்ளி விழாச் சிறப்புப் பொழிவு

மன்னாரில் 2014ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வில் சாட்சியம் வழங்க வந்த ஆயர், அந்த ஆணைக்குழுவில் தனக்கு நம்பிக்கை இல்லை என்பதை வெளிப்படுத்திவிட்டு தான் கொண்டுவந்த அறிக்கையை வாசித்து அளித்தார்.



மன்னாரில் நடைபெற்ற எல். எல். ஆர். சி. அமர்வில் பங்கெடுத்தபோது வன்னியில் இருந்த மக்களில் 146,679 பேருக்கு என்ன நடந்தது? என்ற கேள்வியை முன்வைத்து இலங்கை அரசை ஆட்டம் காணச்செய்தார்.

## துன்புற்ற மக்களைத் தேடி அலைந்தார்



2007ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி மன்னார் இலுப்பைக்கடவை படகுதுறை என்ற இடத்தில் இடம்பெற்ற ஆகாயக் குண்டுத் தாக்குதலில் 13 அப்பாவி மக்கள் கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அந்த இடத்தை தரிசித்தபோது.

## இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்தார்



2012ஆம் ஆண்டு மன்னார் ஆயர் இல்லத்தில் இங்கிலாந்து நாட்டின் உயர் ஸ்தானிகர் ஜோன் ராங்கின் அவர்களுடன் கலந்துரையாடியபோது.

## இணைந்து செயலாற்றினார்




2014ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் திகதி தமிழ் சிவில் சமூக அமையத்தின் முதல் ஒன்றுகூடல் அமர்வில் உரையாற்றியபோது.



2007ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி மன்னார் இலுப்பைக்கடவை - படகுதுறை என்ற இடத்தில் இடம்பெற்ற ஆகாயக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 13 அப்பாவிப் பொதுமக்களில் 3 சிறுவர்களின் இறந்த உடல்கள்.

## ஊனமுற்றவரோடு உடனிருந்தார்!



2010ஆம் ஆண்டு வவுனியா பம்பைமடுவில் வீரோட் அமைப்பினால் நடாத்தப்பட்ட போரில் ஊனமுற்றவர்களுக்கான விளையாட்டு விழாவில்.

## இல்லிடமிழந்தோருக்கு இருப்பிடம்!



2011ஆம் ஆண்டு முள்ளிக்குளம் மக்களின் காணிகளை கடற்படையினர் ஆக்கிரமித்த நிலையில் அவர்களுக்கு தாயாக்குழியில் காணிகளை வழங்கிய வேளையில்.

## இடம்பெயர்ந்த ஏழை மக்களைத் தேடிச் சென்று சந்தித்தார், ஆறுதல் கூறித் தேற்றினார்





## இன்றைய ஜனாதிபதியுடன்



## வட மாகாண முதலமைச்சருடன்



## தமிழ்க் கூட்டமைப்பினருடன்



நோய்வாய்ப்பட்ட நிலையில் இருக்கும் ஆயரை தமிழ்க் கூட்டமைப்பினர் சந்தித்தபோது!

# மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் மேதகு இரா யோசேப்பு ஆண்டகையின்
# ஆயர்த்துவ வெள்ளி விழாச் சிறப்புப் பொழிவு

ஒரு மறைமாவட்ட ஆயர் என்ற வகையில் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தன் மன்னார் மறைமாவட்டத்தில் தனது ஆயர் நிலையின் பணிகளை செவ்வனே நிறைவேற்றினார். திருப்பலி, திருவிழாக்கள், பங்குத் தரிசிப்புக்கள், ஆலோசனைகள், கூட்டங்கள், மாநாடுகள், ஆலய மற்றும் பங்குமனைக் கட்டுமானங்கள், ஏழைகளுக்கான உதவிகள் என அவர் தன் கடமைகளை தன் ஆற்றலுக்கு உட்பட்ட வகையில் சிறப்பாகச் செய்தார்.

இவற்றைவிட காலத்தின் தேவையை அறிந்து அவர் செயலாற்றினார். நல்லாயன் இயேசுவின் இரக்க உள்ளத்தைத் தாங்கி நின்றார். மிகவும் கடுமையான, கொடுமையான ஒரு யுத்த சூழ்நிலையில் ஒரு நல்லாயனுக்குரிய கடமைகளை இறைவாக்கினருக்குரிய துணிவுடன் ஆற்றினார். அவற்றின் சில பதிவுகள் மட்டுமே இங்கு இடம்பெறுகின்றன!

## மக்களின் வேதனைகளைச் சுமந்து சென்றார்



2006 மே 30ஆம் திகதி யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகையுடன் அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களைச் சந்தித்து மக்களின் நிலைமைகளை விளக்கியபோது.

## போராளிகளின் புனர்வாழ்வுக்காக செம்மையாகச் செயலாற்றினார்

பல நூறு பயணங்களில் சில பதிவுகள் இவை!



2010 ஜனவரி 9ஆம் திகதி அன்று 700 இற்கும் அதிகமான முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தம் குடும்பங்களோடு இணைக்கப்பட்டபோது.

## மக்களுக்காக புலிகளோடும், அரசசார்பற்ற பணியாளர்களோடும் செயலாற்றினார்




2005ஆம் ஆண்டு கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச் செல்வன் அவர்களை வடக்குக் கிழக்கு ஆயர்கள் சந்தித்து சுனாமிக்குப் பின்னரான மீள்கட்டுமானங்கள் தொடர்பாக ஆராய்ந்தபோது.



உலக உணவுத் திட்ட அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது அனைத்து மக்களுக்கும் சமமான உணவுப் பங்கீட்டை வலியுறுத்தியவேளையில்.

## நல்லிணக்கத்தை நாடினார்...



நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடலில் பங்கெடுக்க வந்த பௌத்த துறவியை ஆரத்தழுவி உரையாடியபோது.



பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொண்ட பௌத்த மதத் துறவியுடன் அளவளாவிய வேளையில்.

## A LIVING HERO



2016ஆம் ஆண்டு கலையருவியின் ஏற்பாட்டில் வின்சன் பற்றிக் (அமதி) அடிகளார் ஆயரைப் பற்றி எழுதிய 'A Living Hero' என்ற நூல் வெளியீட்டு விழாவில் சக்கர நாற்காலியில் இருந்தவாறு மங்கள விளக்கை ஏற்றுகின்றார். இந்நூலில் ஆயர் அவர்கள் எழுதிய விடயங்கள், அவரைப்பற்றி எழுதப்பட்ட விடயங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

## மடுத்திருப்பதியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வரவேற்றார்!



## நோயுற்ற நிலையில் சிகிச்சைக்குப் பின்னர் நாடு திரும்புகிறார்





2015ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் திகதி அன்று சிங்கப்பூரில் சிகிச்சை பெற்ற பின்னர், கொழும்பு விமான நிலையத்திலிருந்து உலங்குவானூர்தி வழியாகத் தள்ளாடி இராணுவ முகாமிற்கு அருகாமையில் தரையிறங்கி மன்னாரை வந்தடைந்தார்.

## தற்போது ஆயர் அவர்கள் எப்படி இருக்கிறார்? என்ன செய்கிறார்?

ஒரு கையும், ஒரு காலும் வழங்காத நிலையில் - நடமாட முடியாத நிலையில் - சக்கர நாற்காலியில் தன் வாழ்நாட்களைச் செலவிட்டுக்கொண்டிருக்கிறார். தன்னைச் சந்திக்க வருபவர்களிடம் சற்று நேரம் அன்போடு உரையாடுகின்றார். தான் அன்பு செய்த மக்களுக்காக தான் நம்பும் இறைவனிடம் செபித்துக்கொண்டிருக்கிறார். தொடர்ந்தும் அவருக்காகச் செபிப்போம்!



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 68

# புள்ளிகளைவிட 'புள்ளை'களே முக்கியம்

### *சட்டியிலிருந்து அடுப்புக்குள்!*

வட அமெரிக்காவில் ஒரு பறவை இனம் அழிந்து வருவதை அவதானித்த அரசாங்கம் அவ்வினத்தைப் பாதுகாக்கத் தீர்மானித்தது. அதற்காக உயிரியல் பூங்கா ஒன்றில் தனியாக ஒரு அறை அமைக்கப்பட்டு அக்குறிப்பிட்ட இனப் பறவைகள் சில பாதுகாக்கப்பட்டன. அந்த பறவைகளுக்குத் தனி பாதுகாவலர், தனிப் பராமரிப்பு, தனி உணவு, தனி மருத்துவம் என அவைகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. கோடை காலத்தை சமாளிக்க தனியாகக் குளிர் அறையும் அமைக்கப்பட்டது. அப்பறவை இனம் பெருகியது.

பின்னர் வெளி உலகத்துக்கு அவைகள் சுதந்திரமாக விடப்பட்டன. அவைகளுக்கு தம் நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்று தெரியவில்லை. எங்கு அமர்வது, எப்படி அமர்வது என்று தெரியவில்லை. நாளடைவில் எதிரிகளுக்கு உணவாகி, மின் கம்பங்களில் கருகி, வண்டிகளில் மோதி அப்பறவை இனம் அழியத் தொடங்கியது. எந்த இனம் அழியக்கூடாது என்று முயற்சி எடுக்கப்பட்டதோ, அவ்வினம் அழிய அம்முயற்சியே காரணம் ஆனது.

### *பிழையான கருத்தியல்!*

பிள்ளை வளர்ப்பில் பிழையான கருத்தியல்கள் பெற்றோரால் பின்பற்றப்படுகின்றன. அவற்றில் ஒன்று பெற்றோராகிய தாங்கள் தான் அனுபவிக்கவில்லை தங்களின் பிள்ளைகளாவது அநுபவிக்கட்டும் என்று எண்ணி தம் பிள்ளைகளுக்கு அவர்களின் தேவைக்கு அதிகமாகவே அவர்களுக்குக் கொடுத்து அவர்களை அழகுபடுத்துவதுதான்! பிள்ளைகளின் பிறழ்வுக்கு இதுவே பலவேளைகளில் காரணமாக மாறிவிடுவதைப் பல பெற்றோர்கள் எண்ணிப்பார்ப்பதில்லை.

எல்லாவற்றையும் பருக்கிப் பழக்கப்படுத்துதல் கூடாது. இதனை ஆங்கிலத்தில் 'spoon feeding' என்கிறார்கள். அவர்களாகத் தேடிக் கற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பங்களை வழங்கவேண்டும். 'பார்த்தேன், விளங்கவில்லை. கேட்டேன், புரியவில்லை. செய்துபார்த்தேன், கற்றுக்கொண்டேன்' போன்ற கல்வியலாளர்களின் ஆழ்ந்த கல்வியியல் அனுபவக் கருத்துக்கள் உள்ளன என்பதைப் பெற்றோர் புரிந்துகொள்ள வேண்டும்.

### *'ரியூசன் கலாசாரம்'*

நம் பிரதேசங்களில் வளர்ந்துவரும் 'ரியூசன் கலாசாரம்' (Tution culture) மேற்சொன்ன விடயத்திற்கு முற்றிலும் எதிர்மாறான ஒன்றாகவே மாறிவருகின்றது. பாடசாலைகளைவிட 'ரியூட்டறி' களையும் (Tution centres) பாடசாலையில் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களைவிட 'ரியூட்டறிகள்' இல் கற்பிக்கும் 'ரியூட்டர்'களை நம்பி வாழும் ஒரு தலைமுறை வளர்ந்துகொண்டிருக்கின்றது. புதியனவற்றை சுயமாகப் படைக்கும், கண்டுபிடிக்கும் திறனை நடைமுறையில் இருக்கும் மிதமிஞ்சிய 'ரியூசன் கலாசாரம்' இல்லாமல் செய்துவிடும் பெரும் ஆபத்து இருக்கிறது என்பதை இன்றைய பெற்றோரும் பிள்ளைகளும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

வெளி உலகைத் தாங்களாகவே உணர, கண்டுகொள்ளப் பெற்றோர் பிள்ளைகளுக்குத் துணை நிற்கவேண்டும், வழி விடவேண்டும், வாய்ப்புக்கள் கொடுக்கவேண்டும். அப்போதுதான் பிள்ளைகளின் உள்ளத்தில் தேடல் தொடங்கும். அத்தேடல் புதிய புதிய கண்டுபிடிப்புக்களையும், புதிய புதிய கருத்தியல்களையும் மனித சமூகத்திற்குக் கொண்டுவரும்.

### *தவறான உருவாக்கம்!*

அந்தந்த பருவத்தில் பிள்ளைகளுக்கான உருவாக்கத்தினைக் கொடுத்துவிட வேண்டும். சிறுவயதில் பிள்ளைகளுக்கு சரியான உருவாக்கத்தைக் கொடுக்காது, ஒரு வகையில் பிழையான உருவாக்கத்தைக் கொடுத்துவிட்டு பிள்ளைகள் வளர்ந்தபின் பிள்ளைகளைக் குற்றம் சுமத்துகிறார்கள் பல பெற்றோர்கள். உதாரணமாக குழந்தைகளாய், சிறுவர்களாய் இருக்கும்போது அரைகுறை ஆடைகளை அணிவித்து அழகு பார்ப்பார்கள்! அக்குழந்தைகள் வளர்ந்தபின் அதே பாணியில் ஆடைகளை அணிய முற்படுகிறபோது, 'பாரன், தெறிகெட்டுத் திரியிதுகள்!' என்பார்கள். உண்மையில் இந்நிலைக்கு அப்பிள்ளைகளை ஆளாக்கியவர்கள் அவர்தம் பெற்றோர்களும் பெரியோர்களுமே!

### *தொட்டில் பழக்கம் தொடரும்!*

பிள்ளைகள் வளர்ந்தபின், பொதுவாக எவற்றைச் சிறுவயதில் கற்றுக்கொள்கிறார்களோ அவற்றை அவர்கள் பின்பற்றுகிறார்கள்! இந்த அடிப்படை உளவியலைப் பெற்றோர் தங்கள் அனுபவத்தில் கொஞ்சமாவது உள்வாங்கிக் கொள்ளவேண்டும். இல்லையெனில், தாங்கள் அழகு பார்த்த பிள்ளைகளைக் குறித்துப் பெற்றோர், "இவன், இப்பிடித் தறுதலையாய்த் திரியிறான்!", "உவள், தலைய விரிச்சிப்போட்டு பேய்மாதிரித் திரியிது!" என முணுமுணுக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படும்!

அதனால்தான், சரியான பழக்கங்களை வழக்கப்படுத்திக் கொள்வதற்கு நிறைந்த பயிற்சிகள் தேவை. நல்ல பழக்கங்களை கைக்கொள்வதற்கு பிள்ளைகளுக்கான தொடர் உருவாக்கம் வழங்கப்படவேண்டும். தவறான – பிழையான



பழக்கவழக்கங்களை செய்து காட்ட வேண்டிய அவசியமே கிடையாது. அவற்றைப் பிள்ளைகள் தம் குடும்ப, சமூக சூழலில் மிக இலகுவாகவே அறிந்துகொள்கிறார்கள் என்பதைப் பெற்றோர் - குடும்ப அங்கத்தவர்கள் நினைவில் நன்கு நிறுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது.

### *ஆபிரகாம் லிங்கனின் அறிவுரை*

எப்படி ஒரு பிள்ளைக்கு வகுப்பிலும், வீட்டிலும் உருவாக்கம் கொடுக்க வேண்டும் என்பதை அமெரிக்கா நாட்டின் அதிபராய் விளங்கிய ஆபிரகாம் லிங்கன் தன் அன்பு மகனுக்கு கற்பிக்கும் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் எடுத்துரைக்கிறார். ஒவ்வொரு ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் சத்திய வாக்காக இருக்கவேண்டியவை அவரது வரிகள்.

அக்கடிதத்தில், "...அனைத்து மனிதர்களுமே நேர்மையானவர்களாக, உண்மையானவர்களாக இருக்கமாட்டார்கள் என அவனுக்குச் சொல்லித் தாருங்கள். பகைவர்களுக்கு நடுவில் அன்பான, நட்புக்கரம் நீட்டும் மனிதர்களும் உண்டென அவனுக்குத் தெரிவியுங்கள். பொறாமை அவன் மனதைச் சூழாமல் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து ஒடுங்கிப்போவது கோழைத்தனம் எனப் புரியவையுங்கள்.

புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்குத் திறந்து காட்டுங்கள். அதேவேளையில் இயற்கையின் ஈடில்லா அதிசயத்தை இரசிக்கவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். வானில் பறக்கும் பட்சிகளின் புதிர்மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் துரிதத்தையும், பசுமையான மலையடிவார மலர்களின் வனப்பையும் இரசிக்கக் கற்றுத்தாருங்கள்.

ஏமாற்றுவதை விடவும் தோல்வி அடைவது எவ்வளவோ மேலானது என்பதை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். மற்றவர்கள் தவறு என விமர்சித்தாலும்கூட சுய சிந்தனைமீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரட்டுக் குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு அவனைத் தயார் படுத்துங்கள். அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும் என அறிவுறுத்துங்கள். எனினும் உண்மை எனும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்தெடுக்கவும் கற்றுக்கொடுங்கள்.

துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்குப் புரியவையுங்கள். போலியான நடிப்பைக் கண்டால் எள்ளி நகையாடவும் வெற்றுப் புகளுரைகளைக் கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குப் பயிற்சி கொடுங்கள். அவனைக் கனிவாக நடத்துங்கள்.

அதிகம் செல்லம் கொடுத்து உங்களைச் சார்ந்திருக்கச் செய்ய வேண்டாம். சிறுமை கண்டால் கொதித்தெழும் துணிச்சலை அவனுக்கு ஊட்டுங்கள். அதேவேளையில் தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையையும் அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள். இது ஒரு மிகப்பெரிய பட்டியல்தான். இதில் உங்களால் சாத்தியமானதையெல்லாம் கற்றுக்கொடுங்கள். அவன் என் அன்பு மகன். இப்படிக்கு ஆபிரகாம் லிங்கன்." எனக் கூறிச்செல்கின்றார் ஒரு நாட்டின் அதிபர்.

### *ஏட்டுக் கல்விக்கு எட்டாதிருக்கிறது!*

இக்கடிதம் பற்றி அ. அஜந்தன், 'மனங்களில் எப்படி நேர் சிந்தனைகளை விதைப்பது?' என்ற தலைப்பில் 25.07.2017இல் உதயன் நாளிதழில் கட்டுரை வரைந்தபோது, "...இன்றைய பெற்றோர்களைப்போல வைத்தியராவதற்கு அல்லது பொறியியலாளராவதற்குக் கற்பியுங்கள் என்பதை விடுத்து நல்ல மனிதனாகவும் சுயமாகத் தனது பகுத்தறிவாலும், பட்டறிவாலும் இயல்பு வாழ்வை மகிழ்வுடன் வாழக் கற்றுக்கொடுக்கவே அவர் வலியுறுத்துகிறார். இதுவே ஏட்டுக்கல்விக்கு எட்டாதிருக்கும் அனுபவ, வாழ்வியல் கல்வியாகக் கருதப்படுகிறது" என இன்றைய யதார்த்த நிலையை எடுத்தியம்புகின்றார். இன்றைய பெற்றோர் ஆசிரியர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டிய ஒரு முக்கிய அவதானிப்பாகவே இது தெரிகின்றது.

### *விதையினுள் இருக்கும் விருட்சம்*

பாடசாலை ஒன்றினால் பெற்றோருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் ஒன்று பெற்றோரின் கவனத்தை ஈர்க்கவேண்டும்.

"அன்பார்ந்த பெற்றோர்களே! உங்களுடைய பிள்ளைகளுக்கான பரீட்சை விரைவில் ஆரம்பமாகவுள்ளது. பிள்ளைகள் சிறப்பாகப் பரீட்சை எழுதவேண்டும் என்பதில் ஆர்வமாய் இருப்பீர்கள் என நம்புகிறோம். எனினும் இந்த விசயங்களையும் கவனத்திற் கொள்ளுமாறு பணிவாய் கேட்டுக் கொள்கிறோம். பரீட்சையில் வெற்றிபெறாத மாணவர்களில் ஒரு கலைஞன் இருப்பான், அவனுக்கு கணிதம் தேவைப்படாது; அங்கே ஒரு தொழிலதிபர் இருப்பான், அவனுக்கு வரலாறு, இலக்கியம் முக்கியமில்லை; ஒரு இசைஞானி இருப்பான், அவனுக்கு இரசாயணவியல் அவசியமிருக்காது; ஒரு விளையாட்டு வீரனிருப்பான், அவனது உடல் நலனே முக்கியமன்றி பௌதீகவியல் புள்ளி முக்கியமில்லை. பரீட்சையில் அதிக மதிப்பெண் எடுத்தால் சிறந்த பிள்ளை எடுக்காவிட்டால் தரம் குறைந்த மாணவன் என்று தயவுசெய்து அவர்களது தன்னம்பிக்கையை ஒருபோதும் பறித்துவிடாதீர்கள்...

அவர்களுக்குச் சொல்லுங்கள்: 'இது வெறும் ஒரு பரீட்சை மட்டுமே. நீ வாழ்க்கையில் வெற்றிகொள்ள இதைவிடப் பெரிய சவால்கள் நிறைய உள்ளன. உன்மீதுள்ள என் அன்பு, நீ பரீட்சையில் எடுக்கும் மதிப்பெண்ணை வைத்துத் தீர்மானிப்பதில்லை. என்றும் நீ என் பிள்ளை, என் உயிர்.' இப்படிச் சொல்லிப் பாருங்கள் பரீட்சையில் வெல்லாத உங்கள் பிள்ளை ஒருநாள் உலகை வெல்வான்.

வெறுமனே ஒரு பரீட்சை, அதன் மதிப்பெண் உங்கள் பிள்ளையின் கனவை, திறமைகளை அழித்துவிடக்கூடாது. மருத்துவர்களும், பொறியியலாளர்களும் மட்டுமே உலகில் சிறந்தவர்கள் மகிழ்ச்சியாய் இருப்பவர்கள் எனத் தயவுசெய்து நினைக்காதீர்கள்!" எனக் கூறப்பட்டதில் பல ஆழ்ந்த அர்த்தங்கள் நிறைந்திருப்பதை அவதானிக்கலாம். இன்றைய பெரும்பாலான பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப்பற்றிக் கொண்டிருக்கும் மனநிலையைக் காட்டுவதாகவும், அம்மனநிலையில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றத்தினைச் சிந்திக்கத் தூண்டுவதாகவும் மேற்சொன்ன அன்பான வேண்டுகோள் அமைந்திருக்கின்றது.

### *'புள்ளை'கள் முக்கியம்!*

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் பின் தம் பிள்ளைகளின் ஆற்றலைப் புள்ளிகளை மட்டும் வைத்து அளந்துவிடக்கூடாது என்பதை 'மன்னா' 2016 கார்த்திகைப் பத்திரிகையில் வலியுறுத்திக் கூறும் முருங்கன் ஜெயா பாலாஜி, "...பரீட்சை முக்கியம். பரீட்சையின் சித்திகள் முக்கியம். பாராட்டுக்கள் முக்கியம். ஆனால் இவற்றை எல்லாவற்றையும்விட நமது பிள்ளைகள் நமக்கு முக்கியம். இது விடயத்தில் மிகுந்த அவதானத்தோடு பெற்றோர் நடந்துகொள்ள வேண்டும்" எனச் சரியான அளவுகோல் ஒன்றை பரீட்சைக்கும் பிள்ளைகளுக்கும், புள்ளிகளுக்கும் பெற்றோருக்கும் இடையே வைக்கின்றார்.

### *'விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!'*

சிந்தனை ஓட்டத்தினை இரண்டு வகையான அடிப்படையில் பிரித்துப் பார்க்கலாம் என்கிறார்கள் சிந்தனை பற்றிச் சிந்திப்பவர்கள். 1) குவி சிந்தனை 2) விரி சிந்தனை. குவி சிந்தனை, படித்ததின்படி அல்லது படிப்பித்ததின்படி, கேட்டதின்படி, அறிவுறுத்தியதின்படி ஒருவர் செயற்படுவதைக் குறிக்கும். புதிய கண்டுபிடிப்புக்களுக்கு படைப்புகளுக்கு அதிக அளவில் இடமிருக்காது. இருப்பதைப் பராமரிக்கும் நிலையையே காணலாம். ஆனால், விரி சிந்தனை, புதிதாகச் சிந்திப்பதும் புதியனவற்றை புதிய கோணங்களில் படைப்பதற்குத் தூண்டும். விரி சிந்தனைதான் பல துறைகளில் ஆராய்வாளர்களையும், விஞ்ஞானிகளையும், சிந்தனையாளர்களையும், கண்டுபிடிப்பாளர்களையும், கவிஞர்களையும், ஏனைய படைப்பாளிகளையும் இச்சமூகத்தில் உருவாக்கியிருக்கின்றது என்பதனையும் எண்ணிப் பார்க்கவேண்டி இருக்கின்றது.

'விசாலப் பார்வையால் விழுங்க மக்களை!' என்பான் மகாகவி பாரதி. மொட்டுப்போன்ற குவி சிந்தனையைப் பயன்படுத்தி பூப்போன்ற விரி சிந்தனையை விரிவுபடுத்த வேண்டும். மொட்டாக இருந்தால் யார் இரசிப்பார்? பூவைத்தானே இரசிப்பார், சூடுவார், அர்ச்சனையாக்குவார்! மொட்டு மொட்டாக இருப்பதற்கல்ல, பூவாக மலர்வதற்கே! விசாலப் பார்வைக்கும் விரிந்த சிந்தனைக்கும் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை வழிநடத்தட்டும், ஆசிரியர்கள் தம் மாணவச் செல்வங்களுக்கு வழிகாட்டட்டும்!


## சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் - கொள்ளுங்கள். **- மன்னா நிர்வாகம்.**

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,
உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரியவர்களுக்கு விநியோகிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.
**- மன்னா நிர்வாகம்.**

### உளநல தினத்தையொட்டிய சிறப்புக் கட்டுரை

# மனநலன் காக்க மனம்விட்டு பேசுவோம்

எழுத்துரு :
திருமதி தேன்மொழி நிரோஷன்,
ஆசிரியை, (வழிகாட்டலும், ஆலோசனையும்)
மன்/ அடம்பன் மத்திய மகா வித்தியாலயம்.

**ஒக்ரோபர் 10ஆம் திகதி உலக உளநல தினம். இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**



இன்றைய கணனி யுகத்திலே மனிதன் அவசர அவசரமாகப் பயணிக்கிறான். பணம், பதவி, புகழ், சொத்துக்கள், அறிவு, மரியாதை போன்றவற்றைத் தேடிக்கொண்டு இருக்கிறான். இதற்காகத் தனது நேரத்தைச் செலவழிக்கின்றான்; விருப்பு வெறுப்புக்களைத் துறக்கின்றான். தனது இலக்கை நோக்கிய பயணத்திலே வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறான். இந்த ஓட்டத்திலே அவன் எண்ணற்ற சிக்கல்களுக்கும், முரண்பாடுகளுக்கும், சவால்களுக்கும், அழுத்தங்களுக்கும் முகம் கொடுத்துக்கொண்டிருக்கிறான்.

இவற்றினால் அவனுக்கு மிஞ்சுவது **மன அழுத்தமே (Stress).** இன்றைய காலத்தில் மன அழுத்தம் இல்லாத நபர்களைக் காணவே முடியாது எனலாம். குழந்தைகள் தொடக்கம் வயோதிபர் வரை ஒவ்வொருவரும் ஏதோ ஒருவிதத்தில் இன்று அழுத்தத்திற்கு உள்ளாகிய நிலையிலேயே காணப்படுகின்றனர். இந்த மன அழுத்தமானது நாளடைவில் நீண்டுகொண்டு செல்லுமானால் இது பாரிய உள நோய்களுக்கோ அல்லது உடல் நோய்களுக்கோ வித்திடுவதாக அமையக்கூடும். எனவே இதனை முளையிலேயே கிள்ளி எறிந்தால் மட்டுமே நாம் வாழும் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்கும். மாறாக வளர விடுவோமேயானால் அது வளர்ந்து விருட்சமாகி வேறு வேறு நோய்க் கிளைகளைப் பரப்ப ஏதுவாகும். ஆழமாக வேர்பதித்துவிட்டால் அதனை அசைக்க முடியாத நிலை ஏற்படும். அல்லது மரணம்வரை இது எம்மோடு ஒட்டிக்கொண்டு வாழ்வையே சீரழிக்கக்கூடியதாக மாறக்கூடும். ஆகவே ஆரம்பத்திலேயே இதனை எப்படி ஒழித்துக்கட்டலாம் என இன்று பலரும் வலைத்தளங்களிலும் நூல்களிலும் விடை தேடுகின்றனர். உள மருத்துவர்களிடம் அறிவுரையை வழிகாட்டலை நாடுகின்றனர்.

ஆனால் இந்த மன அழுத்தத்திற்குரிய நிவாரணி எம்மில், எம் வீட்டில், நாம் வாழும் உறவுகளிடையேதான் இருக்கின்றது என்பதைக் கண்டுகொள்ளத் தவறிவிடுகிறோம். எங்கே எப்படி என்னிலும் பிறரிலும் அந்த மன அழுத்தத்திற்குரிய மருந்து இருக்கின்றது என்று ஆராய்வது அவசியமாகிறது. அது விலை கொடுத்து வாங்கத் தேவையில்லாத, கால் கடுக்க வரிசையாக நின்று வைத்தியரை சந்திக்கத் தேவையில்லாத, முற்கூட்டியே முன்பதிவு செய்யத்தேவையில்லாத, மிகவும் இலகுவில் கிடைக்கக்கூடிய மருந்து! அதுதான் **“மனம் விட்டுப் பேசுதல்”** எனும் உயரிய மருந்து. இந்த விலைமதிப்பே இல்லாத மருந்துதான் இன்று விலை கொடுத்தாலும் வாங்கமுடியாத அரிய பொருளாக மாறிவிட்டது! **“வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும். மனம்விட்டுப் பேசினால் மன அழுத்தம் தீரும்”** இதுவே எமக்குத் தெரிந்து, தெரியாமல்போன ஆரோக்கிய வாழ்வின் இரகசியம்!

ஆனால் இன்றைய தொழில்நுட்ப உலகில் நாமும் இந்தச் சின்ன இரகசியத்தைத் தொலைத்து அதனை எங்கெங்கோவெல்லாம் தேடிக்கொண்டிருக்கிறோம். தொழில் நுட்பங்கள் எங்களை மாற்றவில்லை. நாம்தான் அதற்கு அடிமையாகி அதன் காலடியில் அதன் கட்டளைக்கேற்ப ஆடிக்கொண்டிருக்கிறோம். இதனை இன்று இப்படியும் சொல்லிக்கொள்ளலாம். “ஒரு கூட்டம் செல்போனைப் பார்த்து சிரிக்குது. இன்னொரு கூட்டம் லப்ரொப்பைப் பார்த்து சிரிக்குது. மற்றொரு கூட்டம் TV பார்த்து சிரிக்குது. பக்கத்தில் இருக்கிறவனோடு யாரும் சிரித்து பேசல. அவனோ இருக்கிறான்.....! விரக்தியின் விளிம்பில் .....! தெளிவான மறுக்க முடியாத உண்மை இது. இந்த உண்மையே இன்று மனஅழுத்தங்களை ஏற்படுத்தி நிற்கின்து. மனிதன் மனிதனோடு நேரடியாகத் தொடர்புறாமல், உறவாடாமல், உரையாடாமல் சுயநல வாழ்க்கையை ஏற்படுத்தி வாழ்ந்துகொண்டிருக்கின்றான். “ஏன் நான் மற்றவர்களோடு பேச வேண்டும்? இவர்களிடம் எனக்கென்ன தேவை இருக்கிறது? எல்லாமே என் கைக்குள் - என் கையடக்கத்துள் இருக்கிறது. பிறகேன் மற்றவரோடு நான் உறவாட உரையாட வேண்டும்?” என்ற எண்ணமே இன்று எம்மவர் மனதில் புரையோடியுள்ளது.

முன்னால் நமக்குப் பழக்கமானவர்கள் வருகின்றார்கள் ...... முகத்தை வேறு பக்கம் திருப்பி செல்கின்றோம் ....... தப்பித் தவறிப் பார்த்துவிட்டால் .... அதிகம் கதைத்து விடுவார்களோ அல்லது என் குடும்பத்தைப்பற்றி ஏதும் கேட்டு விடுவார்களோ என்ற எண்ணத்தினால் வேறு திசை நோக்கிப் பார்த்துச் செல்கின்றோம். அவன் நல்லவனோ கெட்டவனோ, உன்னில் அக்கறை உள்ளவனோ இல்லாதவனோ, அவன் உன்னோடு பேச விழைகின்றான்! ஏன் என்றால் உன்னைவிட ஒருபடி அவன் உயர்ந்துவிட்டான். உன் உதடுகளை ஊமையாக்கிய நீ ஒருபடி தாழ்ந்துவிட்டாய் என்பதை மறவாதே. நீதான் வாயிருந்தும் இல்லாதவனாக, பேசத்தெரிந்தும் ஊமையாக, கண்ணிருந்தும் குருடனாக, அறிவிருந்தும் அன்பில்லாதவனாக விலகிச் செல்கின்றாயே! ஆகவே நீ தாழ்ந்துவிட்டாய்!

இன்று எம் குடும்பங்களது வாழ்க்கைமுறையைப் பார்க்கும்போது வேலையுலகில் பிஸியாகி, கல்வியுலகில் கனமாகி, வலைப்பின்னல்களுக்குள் சிக்காகி, தொடர்புசாதனங்களுக்குள்ளே தொலைவாகி, அழுத்தங்களுக்குள்ளே அழுந்தி அழிவடைந்து கொண்டிருக்கின்றன. நம்மிடம் முன்பிருந்த கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை இன்று வேரோடு அழிந்துவருகிறது. தனிக்குடும்பங்களாக அதுக்குள்ளும் ஒவ்வொருவரும் தனி இராஜங்கம் அமைத்துக்கொண்டு தனித்தனி தீவுகளாக ஆளுக்கொரு மூலையில் முடங்கிக் கிடக்கின்றோம். காலையில் அவசர அவசரமாக வேலைக்கு ஓடி, அது முடிந்ததும் பற்பல அழுத்தங்களோடு வீட்டுக்கு வருவோம்! வந்ததும் அவசரமான மதிய உணவின்பின் பிரத்தியேக வேலைகளுக்குள் அமிழ்ந்து விடுகின்றோம்.

வீட்டிலே உறவுகளை அழிப்பதற்கென உருவாக்கப்பட்டுள்ள தொலைக்காட்சிகளில் நமது உறவுகளைத் தொலைத்துவிட்டு, அங்கே தொலைக்காட்சியைப் பார்த்துச் சிரிக்கின்றோம். கண்ணீர் விடுகின்றோம். ஆனால் வீட்டுக்குள்ளே இருக்கும் ஒரு ஜீவன் அதன்போது ஏதாவது பேச அல்லது கேட்க முற்பட்டால் நாம் சீறிப் பாய்கின்றோம்; எரிச்சல்படுகின்றோம். எதிரே வருபவர் நமது பதில் பேச்சோடு சொல்ல வந்ததை மறந்து, அதிர்ச்சியடைந்தவராய், தன் மனதிலே அனைத்தையும் அடக்கிவைக்கிறார். நாளடைவில் குறித்த அந்த நபர் தன் மனதுக்குள் பல விடயங்களை அடக்கி வைத்தே பழகிவிடுகிறார். இதனால் அடக்கிவைத்த விடயங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மனதை அழுத்தி அழுத்தி, கால ஓட்டத்தில் உள ரீதியான பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

அதுமட்டுமல்ல தொலைக்காட்சி பார்த்த அப்போது சிரிப்பவர்கள்கூட, அழுபவர்கள்கூடஅப்போது மட்டும் தங்கள் அழுத்தங்களை மறந்து இருப்பார்கள். ஆனால் அடுத்த நாளும் அதே அழுத்தத்தையே சுமந்து செல்வார்கள். இவர்களுக்கும் அதே கதிதான்.

பிள்ளைகள் ஒரு பக்கம் .... என்ன படிக்கிறார்களோ ....? எங்கு செல்கிறார்களோ....? இன்று அந்தப்பிள்ளை எப்படியான சம்பவங்களைச் சந்தித்ததோ ... என்ற கவலை தந்தையாகிய தாயாகிய எமக்கு பெரும்பாலும் இல்லை. ஒருநாள் பிள்ளை ஏடாகூடமாக ஏதாவது செய்துவிட்டால் மாத்திரமே கண் திறந்து பார்க்கிறோம். பிள்ளை ஏதாவது விபரீதத்தில் இறங்கிவிட்டால், “முதலே என்னிடம் சொல்லி இருக்கலாமே” என்று மாரடித்துப் புலம்புவோம். சொல்லுவதற்குத்தான் நீ சந்தர்ப்பம் கொடுக்கவில்லையே .... பிள்ளையோடு பேச நேரம் ஒதுக்கவில்லையே .... வீட்டிலே மகிழ்வான சூழலை உருவாக்கிக் கொடுக்கவில்லையே .... பணத்தைக் கொடுத்தாய்... பகட்டாக வாழக் கற்றுக்கொடுத்தாய்... ஆனால் பலத்தோடு பாசத்தோடு பேசத்தான் ஒரு மணி நேரம் கொடுக்கவில்லையே! பிறகு எப்படி பிள்ளையிடம் கேள்வி கேட்பாய்? கணவன் மனைவி உறவிலும்கூட இப்போது இதே பிரச்சினைதான். தம்மிடம் உள்ள சிறு சிறு அழுத்தங்கள், பிரச்சினைகளை வாய்விட்டுப் பேசவும் நேரமில்லை, காது கொடுத்துக் கேட்கவும் நேரமில்லை.

வேளாவேளைக்கு சாப்பாடு கொடுத்தால் போதும், கொடுக்காவிட்டாலும் பரவாயில்லைப்போல் இருக்கிறது. கடைச்சாப்பாடு ஆளுக்கொரு நேரத்தில் வீட்டுக்கு வரும். ஆளுக்கொரு நேரத்தில் உணவை உண்பர். வாயைத் திறந்து பேசினால் முத்துக் கொட்டிவிடும். ஆகவே அப்படியே ஆளுக்கொரு பக்கம் சென்று தங்கள் செல்போன்களை (செல்லாத போன்) அவரோடு தூக்கிக்கொண்டே நித்திரைக்கு செல்வர். அப்படியே அதனோடு உறவாடியே அதனை நெஞ்சோடு அணைத்துக்கொண்டே தூங்கியும் விடுவர். மனசில்லாதவனே, நீ பாசத்தோடு அணைத்து, கதை பேசிக்கொண்டே தூங்கவேண்டிய உன் உறவுகள் அங்கே அங்கே ஆளுக்கொரு பக்கம் எதையோ யோசித்துக்கொண்டு தூங்கியதோ இன்னும் தூங்கவில்லையே தெரியவில்லை. இங்கே நீ பாளாய்ப்போன அந்த செல்போனையா கட்டிப்பிடித்துக்கொண்டு தூங்குகிறாய்? இதனால்தானே உன் வீட்டில் சந்தேகப் பார்வைகள்....! உறவுக்குள் விரிசல்கள் ....! தேவையற்ற உறவுகளின் தலையீடுகள் ....! ஏன் விவாகரத்து, தற்கொலை போன்ற தாங்கிக்கொள்ள முடியாத துயரங்களை நீ அனுபவிக்கிறாய். இவை அனைத்தையும் உருவாக்குவதால் உன் குடும்பத்தில் எல்லோருக்கும் மன அழுத்தம்தான் நிறைய இருக்கிறது.

இதனை மாற்ற, தேற்ற ஒன்றே ஒன்றுதான் தேவை. உன் அன்பான பேச்சு, ஆதரவான பார்வை, பாசமான வார்த்தைகள்! இதை நீ இலகுவாகக் கொடுக்கலாம்தானே. பிள்ளைகளது, மனைவியினது, கணவனது, பெற்றோரது விருப்பு வெறுப்புகளைப்பற்றி பகிர்ந்துகொள், புரிந்துகொள். ஒருவேளையேனும் ஒன்றாக அமர்ந்து மகிழ்வாக உண். பாராட்டக்கூடிய நல்ல வார்த்தைகளை வழங்கு. தட்டிக்கொடுக்கும் தரமான சொற்களைச் சொல்லி ஊக்கமூட்டு. கவனமாக அவர்களுக்கு செவிமடு. வாழ்க்கையை வாழ்வதற்காக நம்பிக்கையூட்டு. அரவணைப்புணர்வை, பாதுகாப்பு உணர்வை உருவாக்கு. நீங்கள் அன்பாலும் பாசத்தாலும் அக்கறையாலும் பரிவாலும் உங்களது வார்த்தைகளால் மற்றவர்களுக்கு மருந்திடுங்கள். வார்த்தைகளால் போடும் மருந்தே உலகில் மிகப்பெரிய நிவாரணமாக இருக்கிறது. பாசத்தோடு நாலு வார்த்தைகள் பேசும்போது மோசமான அனுபவங்கள் எல்லாம் மாயமாகி மறைந்துவிடும். உலகில் வாழும் ஒவ்வொரு உயிரும் நமக்காக ஒரு உயிர் இருக்கிறது என்று உயர்வோடு இருந்தாலே தற்கொலைகள் இல்லாதே போய்விடும். கடினமான வார்த்தைகளால் மென்மையான இதயங்களைத் தொடமுடியாது. ஆனால் மென்மையான வார்த்தைகளால் கடினமான இதயங்களை ஊடுருவ முடியும். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# புனிதர்களின் பாதையில்

## புனித புரூனோ

*தவமுனிவர் - (கி.பி. 1030 - 1101)*



**மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்**

இவர் தோற்றுவித்த மௌன சபையைப்பற்றி இவ்வாறு பல காலமாகப் புகழ்ந்து சொல்லப்படுகிறது. “சபை சிதைவுறவில்லை. எனவே சீர்திருத்தப்படவில்லை!” கொலோன் நகரில் பிறந்த இவர் ரீம்ஸ் நகரில் 46 வயதில் பேராயரின் செயலாளராகப் பணியாற்றினார். உரோமையிலும் மற்ற இடங்களிலும் குருக்களிடையே பெருகிக்கிடந்த அட்டூழியங்களையும், அவலங்களையும் களைந்தெறிவதில் பாப்பு 7-ஆம் கிரகோரிக்கு வலக்கைபோல் இருந்து உழைத்தார். இருப்பினும் இவரது கனவெல்லாம் தனிமையை நாடித் தவசெப முயற்சிகளில் நாட்களைச் செலவிட வேண்டும் என்பதே. இவரது திட்டத்தை விருப்புடன் ஏற்றுக்கொண்ட இளைஞர்களுடன் ஷார்ட்ரூஸ் என்ற மலைப்பகுதியில் மனிதர் எளிதில் அணுகமுடியாத சூழலில் தங்களின் மௌன, செபதவ முயற்சிகளைத் தொடங்கினார். பொதுவில் ஒரு சிற்றாலயம், ஒவ்வொருவருக்கும் ஒரு குடிசை. காலை, மாலை கட்டளைச் செபங்களுக்கு மட்டும் ஒன்றாகக் கூடினர். பெரிய திருநாட்களின்போது மட்டுமே ஒன்றாக உண்பதற்கு வருவர்!

இவரது தவ, செப முயற்சிகளைப்பற்றிக் கேள்விப்பட்ட திருத்தந்தை 2ஆம் அர்பன் இவரை உரோமைக்கு அழைத்துத் தமக்கு ஆலோசகராகிக் கொண்டார். புருனோவுக்கு இதைவிடப் பெரிய சிலுவையும் கசப்பான, காடியும் காத்திருக்க முடியாது. இருப்பினும் கீழ்ப்படிந்தார். இவரின் துறவிகள் இவரை உரோமைக்குப் பின்தொடர முயன்றபோது, அவர்களைத் தடுத்து நிறுத்திவிட்டார். புனிதர் உரோமையிலும் தனிமையை நாடினார். திருத்தந்தைக்குத் தேவைப்பட்ட நேரங்களில் சென்று உதவினார். பேராயர் பதவிக்குத்தான் தகுதியில்லை என்று சொல்லி, அதை ஏற்க மறுத்துவிட்டார். ஷார்ட்ரூஸ் துறவிகள் தங்களின் அழைத்தலில் நிலைத்து நிற்க அருமையான மடல் ஒன்று எழுதி அனுப்பினார். கலேபிரியாவில் தோற்றுவித்த 2 மடங்களிலும் அதே ஆன்மீகத்தில் துறவிகளை வழிநடத்தினார்.

கி.பி. 1101 செப்ரம்பர் இறுதியில் அவரது உடல்நிலை குன்றியது. இறப்பு அடுத்திருந்ததை உணர்ந்த புரூனோ தம் சக துறவிகளை அழைத்துத் தமது வாழ்க்கையைப் பாவங்கீர்த்தனமாக அறிக்கையிட்டு விசுவாசப் பிரமாணத்தையும் புதுப்பித்துக் கொண்டார். இந்தச் சூழலில் தமது தூய ஆன்மாவை இறைவனிடம் ஒப்படைத்தார்.

லூத்தர் கிளர்ச்சி செய்து பிரிந்துபோன காலத்தில் மேலை நாடுகளில் 195 கார்த்தூசியன் மடங்களிலிருந்தன. இன்று ஏறத்தாழ 500 மௌன துறவிகளும் இதேபோல் 3 மடங்கு பெண் துறவிகளும் இந்தச் சபையை அணிசெய்கின்றனர்.

# கவிதைக் களம்

**ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகையின் ஆயர்த்துவ வெள்ளி விழாக் கவிதை**

## கண்ணீருஞ் சொல்லாதோ கதை !

**- எழுத்துரு: அ. அந்தோனிமுத்து, ஒய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் -**



வண்ண முகம் கொண்டவரே! வளமான ஆளுமையே!
  வானமுதம்போல வாரி இறைத்தவரே!
எண்ண இனிக்குதையா ஏற்றமிகு நின்செயல்கள்
  ஏணிப்படியாய் இருந்து ஏழைகளை வாழவைத்தீர்
உண்ண உணவின்றி ஊர்தவித்து வாடுகையில்
  ஊருணியாய் நீரிருந்து உதவிபல செய்தவர்நீர்!
மண்ணவர்கள் வாழ்வுபெற வழிசமைத்த வல்லவரே
  மனம்நொந்து வேதனையால் மயங்கிக் கிடப்பதுஏன்?

போர்எனும் வல்லரக்கன் கோரப்பிடியினிலே
  அப்பாவித் தமிழ்மக்கள் நாதியின்றித் தவிக்கையிலே
பார்எங்கும் கொடியசெய்தி பகர்ந்தவரின் நிலைவிளக்கி
  பாசமிகக் கொண்டவர்கள் தவிக்கும்நிலை தனைவிளக்கி
நேர்கொண்ட மனதினோடு நேர்த்தியாய் எடுத்துரைத்து
  வீரமுடன் எவர்முன்னும் பகர்ந்துநின்ற பண்புடையீர்
ஊரெல்லாம் உம்மைநம்பி நிம்மதியாய் வாழ்க்கையிலே
  உங்களுடல் முடங்கியஇச் சோகமதை என்னசொல்வேன்?


மடுப்பதியில் குவிந்திட்ட அத்தனை அகதிகளும்
  மனித மாண்புடன்வாழ மனமுவந்து சேவைசெய்தீர்
கடுப்பெதுவு மில்லாமல் சாதிமத பேதமின்றித்
  தங்கத் தமிழினமே! தயங்காது வாருமென்று
உடுப்போ டுணவதுவும் உறைவதற்கு இல்லிடமும்
  உவப்போ டளித்தவரை நிம்மதியாய்த் தங்கவைத்தீர்
தடுத்து நின்ற தடைச்சுவர்கள் தகர்த்தெறிந்து ஆங்கவரை
  தாராள மாயணைத்துத் தாங்கியே காப்பளித்தீர்!

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
  கேட்டார் பிணிக்கும் தகையவாய்ச் செயல்வீர!
உயர்ந்த சிந்தனை உமக்கிருந்த காரணத்தால்
  உரமிகுந்த நெஞ்சுடனே உண்மைதனை உரைத்தவர்நீர்!
பயந்த சுபாவமது மருந்துக்கும் இருந்ததில்லை
  ஏழைகளின் குரலாக அகிலமதில் நீரிருந்து
வியந்தவர்கள் அமைதிபெற வேதனைகள் எடுத்துரைத்த
  வலிமைமிகு சிந்தை பாழ்பட்டுப் போனதென்னோ?

ஆயர்த்துவ சேவையிலே ஆண்டிருபத்தைந்துடனே
  அரியகுருச் சேவையிலே ஆண்டம்பதைக்கடந்து
ஓயாப் பணிசெய்த உத்தமனே உம்மையிப்போ
  தீராத வன்பிணிநோய் தாக்கியதின் மர்மம் எண்ணி
தாயாய் எமை நாளும் காத்துநின்ற தண்ணிழலே
  நாதியற்று நீரும் முடங்கிவிட்ட மர்மம் எண்ணி
வாயாலுரைப்பதற்கு என்னாவால் இயலவில்லை
  வரையாது கண்ணீர் சொரிந்தழுது நிற்கின்றேன்!

யோபு மகான் வாழ்வினிலே கூளியது செய்தவினை
  பேரழிவின் எல்லை மட்டும் அவரைஅலைக் கழித்திடினும்
தாவியுமை அணைந்ததினால் இருமடங்காய் அவர் செல்வம்
  பொங்கிப்பெருக, வழிசமைத்த தெய்வமே! எம்
மங்காப்புகழ் படைத்த உமது பிள்ளை எமது ஆயர்
  நல்லசுகம் பெற்று நலமாக வாழ்வதற்கும்,
எங்கும் அவர் பெருமை ஏற்றமுடன் பரவுதற்கும்
  கண்ணீரில் நாம்சொல்லும் கதையதனைக் கேட்டருள்க!

# கொஞ்சம் சிரிங்க



**கமல்:** டேய் மச்சான், மன்னாப் பத்திரிகையில 'கொஞ்சம் சிரிங்க' என்று ஏண்டா கிடக்கு?
**விமல்:** அதா, உன்ர பல்லு கிளீனா இருக்குதா என்று பார்ப்பதற்குடா!
**கமல்:** ....?

..................................

**கமலா:** டாக்டர்.... என் எதிர் வீட்டுக்காரி வாஷிங் மெஷின் வாங்கியிருக்கா....!
**டாக்டர்:** இதை ஏன் என்கிட்டே சொல்றே?
**கமலா:** நீங்கதானே வயிற்றெரிச்சல் இருந்தா வரச்சொன்னீங்க!

..................................

**பாலா:** "ஏன்டா சைக்கிள் உயரம்கூட இல்ல நீ சைக்கிள் ஓட்டறே"
**குமார்:** ரயில் ஓட்டறவர் நீளமாவா இருக்காரு?

..................................

**நண்பன்:** என்ன மச்சான் ஏன் சோகமா இருக்கிறாய்?
**கபி:** ஒன்றும் இல்ல கொஞ்சம் காசு தேவை.
**நண்பன்:** பாங்கில ஜாயிண்ட் அக்கவுண்ட் எண்டால் உனக்கு வேண்டும்போது நீ எடுத்துக்கொள்ளலாமே.
**கபி:** இல்லடா மச்சான் அது என்ர மனைவி, மாமியார் பெயரில அல்லவா இருக்குது.

..................................

**தவளை நண்பன்:** என் பையனுக்கு பிரான்ஸ்ல ரெண்டு கடை சொந்தமா இருக்கு.
**மற்ற தவளை:** என்ன கடை?
**தவளை நண்பர்:** வேறென்ன "சாக்கடை" தான்

..........................................

**மஞ்சு:** அது யாரு அம்பிகாதானே போறா?
**அஞ்சு:** ஆமா
**மஞ்சு:** கல்யாணத்துக்கப்புறம் அவள் எப்படி குண்டாயிட்டா பாரு
**அஞ்சு:** அவ கொடுத்து வச்சவ. கட்டிக்கிட்டது சமையல் காரனாச்சே.

..........................................

**மெலா:** கண் தெரியாத வெளவாலுக்கு நன்கு பறக்கத்தெரிவதில் ஆச்சரியமில்லை. அது தனது தலைப்பகுதியிலிருந்து வெளியாகும் 'அல்ட்ராகானிக்' அதிர்வலைகளைக்கொண்டு எதிர்ப்படும் பொருட்களை அறிந்து ஒதுங்கிக்கொள்கிறதாம்.
**நிலா:** பாராட்டத்தான் வேணும்! கண் இருக்கிறவனே இடிச்சிட்டுப்போறானே!

..............................................

**மகன்:** அப்பா என்ர பல்லு ரொம்ப நாளா ஆடிக்கிட்டே இருக்கு.
**அப்பா:** மகன், எப்ப அரங்கேற்றம் செய்யலாம்?

# மன்னா விளம்பரப் பலகை

"ஒருவர் உனக்கு எத்தீங்கும் செய்யாதிருக்கும்போது அவரை வீண் வாதத்திற்கு இழுக்காதே"

"கடவுளின் விரல் எழுதிய சிறுகதைதான் ஒவ்வொரு மனிதனின் வாழ்வும்"

.......................

"மனிதா! தண்ணீராய் நீ இருந்தால் தவளைதான் உன்னைச் சுற்றிவரும். ஆனால் சூரியனாய் நீ இருப்பாயானால் பூமியே உன்னைச் சுற்றிவரும்"

.......................

"திரும்பப்பெற முடியாத விடயங்கள் உச்சரிக்கப்பட்ட சொல், தவறிவிட்ட வாய்ப்பு, கடந்துபோன நிமிடம்."

நல்லதை எண்ணுவது அறிவு. எண்ணியதை முடிப்பதே முயற்சி. மகிழ்ச்சியும் ஒன்றித்த உழைப்புமே வாழ்நாளை அதிகரிக்கும்.

.......................

"கனவுகளிலிருந்து வெற்றிகளைச் சென்றடையும் பாதைகள் எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்கின்றன. அவற்றைக் கண்டடையும் பார்வையும் அதற்கான தைரியமும் அதில் பயணிக்கும் பொறுமையும் உங்களுக்கு உண்டாகட்டும்"

.......................

உறுதிபெற்ற நெஞ்சங்களே முன்னேறுங்கள்!
சாதித்துச் சாவதே வாழ்வாகும்.

இறைவன் உனக்குள்ளேயே இருக்கும்போது அவரை நீ எங்கேயும் போய்த் தேடவேண்டாம். உன்னை நீ அறியும்போது உன்னுடைய ஆற்றலையும் உணர்ந்துகொள்கிறாய்.

பணம் நல்ல பணியாளர், ஆனால் மோசமான எஜமான். அது அதிகம் கிடைக்கப்பெற்றால் இதயமற்ற கல்நெஞ்சு கொண்ட ஜடமாக மாற்றி நம்மை ஆட்கொண்டுவிடும்.

# மருத்துவக் குணங்கள் நிறைந்த வெள்ளரிக்காய்



வெள்ளரிக்காய் சத்துக்கள் மிகுந்த காயாகும். இது பல ஆபத்தான நோய்கள் வராமல் தடுக்கும். புற்று நோயிலிருந்துகூட நம்மைக் காப்பாற்றும். நச்சுக்களை வெளியேற்றி, போதுமான நீர்ச்சத்துக்களை தக்கவைக்கும் அவசியமான வேலையை ஒரு வெள்ளரிக்காய் அன்றாடம் செய்கிறது.

### உங்கள் சருமத்துக்கு ஆரோக்கியம் அளிக்கும்.

வெள்ளரிக்காயில் 95 சதவீத நீர்ச்சத்து உள்ளது. உடலில் தங்கும் தீய நச்சுக்களை எல்லாம் இழுத்து சிறு நீரகத்துக்கு அனுப்புகிறது. இதனால் உங்கள் சருமம் மெருகேறும்.

### வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்க உதவும்

அன்றாடம் சாப்பிடும் உணவுகளின் கலோரியை எரிக்க வெள்ளரிக்காய் உதவுகிறது. வளர்ச்சி மாற்றத்தை அதிகப்படுத்துகிறது. எனவே கலோரி அதிகரிக்காமல் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

### வாய் துர்நாற்றத்தைப் போக்க உதவும்

உங்களுக்கு வாய் துர்நாற்றப் பிரச்சினை இருக்கிறதா? அப்படியென்றால் தினமும் வெள்ளரிக்காய் சாப்பிடுங்கள், இது வாயில் உண்டாகும் கிருமிகளை அழிக்கும், ஈறுகளை பலப்படுத்தும், அதோடு வாய் துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்தும். வாய் துர்நாற்றத்தைப் போக்க, ஒருதுண்டு வெள்ளரிக்காயை வாயில் வைத்துக்கொள்ளுங்கள். 30 நொடிகள் வரை வைக்கவும், அது வாயில் உள்ள கிருமிகளை அழித்து துர்நாற்றத்தைப் போக்கும்.

### உடல் எடையைக் குறைக்கும்

தினமும் வெள்ளரிக்காயை சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறைவதைப் பார்ப்பீர்கள். கொழுப்பு செல்கலைக் கரைக்கும். அதிக நீர்ச்சத்து கொண்டுள்ளதால், கொழுப்பு கார்போவைதரேட் சத்துக்களை வேகமாய் ஜீரணித்து சக்தியாய் மாற்றிவிடும். மேலும் உடல் எடையை அதிகரிக்க செய்யாது. வயிற்றிலுள்ள கொழுப்பைக் கரைத்து உடல் எடையை குறைக்கச் செய்யும்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,
உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரியவர்களுக்கு விநியோகிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**- மன்னா நிர்வாகம்.**

# சமையல் குறிப்பு

## *தக்காளி பஜ்ஜி*







**தேவையானவை:**

கடலைமா - 150 கிராம்
தக்காளி - 6
பெருங்காயம் - கால் சிட்டிகை
உள்ளி - 5 பல்
மிளகு - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு
பொரி- 100 கிராம்
எலுமிச்சைப்பழம் - 1
பச்சை மிளகாய் - 3
பெரிய வெங்காயம் - 1

**செய்முறை :**

உள்ளி, மிளகை அரைத்து கடலை மாவில் சேர்த்து, அதில் பெருங்காயத்தையும் உப்பையும் கலந்து, பஜ்ஜி மாப் பதத்துக்கு கரைத்துக் கொள்ளுங்கள். தக்காளியை நன்கு கழுவி இந்த மாவில் போட்டுக் கொள்ளுங்கள். சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் மாவோடு சேர்த்து தக்காளியை போட்டு வேக வைத்து எடுங்கள். இன்னொரு பாத்திரத்தில் பொரியைக் கொட்டி, வெங்காயம், பச்சை மிளகாயை சிறுசிறு துண்டுகளாக வெட்டி, பொரியில் போட்டு எலுமிச்சைப் பழத்தைப் பிழிந்துவிட்டு, கொத்தமல்லியை சிறிதளவு போட்டு நன்கு பிசைந்து கொள்ளுங்கள். தக்காளி பஜ்ஜியை இரண்டாக வெட்டி நடுவில் இந்த பொரிக்கலவையை அள்ளி வைத்துப் பரிமாறுங்கள்.

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

## தொடர் 22 -

**442. புனித மரியா, வானதூதர் இவர்கள் தவிர, திருச்சபை புனிதர்களை எத்தனைக் குழுக்களாகப் பிரிக்கிறது?**

**பின்வருமாறு பிரிக்கிறது:** திருத்தூதர்கள் (Apostles), மறைச்சாட்சியர் (Martyrs), மறைப்பணியாளர் (Priest), மறைவல்லுநர் (Doctors), மேய்ப்பர் (Pastor), ஆதீனத் தலைவர் (Abbot), துறவி (Religious), வனத்துறவி (Hermit), கன்னியர் (Virgin), புனிதர் (Saints – ஆண்/ பெண்)

**443. புனிதர்கள் என்பவர் யாவர்?**

**பொதுவாக,** அருள்நிலையில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் புனிதர்தான்.

**குறிப்பாக:-**

அ) தங்களின் புனித, புண்ணிய வாழ்வை முன்னிட்டு திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டவர்கள் புனிதர்கள் ஆவர்,

ஆ) இவர்கள் இறையாட்சிக்காகத் தங்களையே முற்றிலுமாக அர்ப்பணித்தவர்கள். எனவே திருச்சபை இவர்களைப் புனிதர்களின் நிலைக்கு உயர்த்தி இவர்களின் பரிந்துரையைக் கேட்க நம்மை அழைக்கிறது,

இ) கிறிஸ்துவோடு துன்பப்பட்டு, மாட்சியடைந்த இவர்களிடம் நிறைவேறிய பாஸ்கா மறை நிகழ்வுகளைத் திருச்சபை பறைசாற்றுகிறது.

**444. புனிதர்களுடைய திருநாள்கள் எப்போது கொண்டாடப்படுகின்றன?**

சாதாரணமாக, புனிதர்கள் மரணம் அடைந்த நாள் அவர்களின் விண்ணகப் பிறப்பு நாளாகக் கருதப்பட்டு அந்நாள் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. எனினும் திருமுழுக்கு யோவானைப் பொறுத்தமட்டில், தம் தாயின் வயிற்றில் அவர் இருந்தபோது பிறப்புவழி பாவத்திலிருந்து அவர் புனிதப்படுத்தப்பட்டிருந்ததால், அவருடைய பிறந்த நாளையும் அவர் மறைசாட்சியாய் இருந்ததால், தலைவெட்டுண்ட திருநாள் என்று வேறொரு நாளையும் அவரைக் குறித்துக் கொண்டாடுகிறோம்.

**445 புனிதர்களுக்கான சிறப்புப் பெருவிழாக்கள் எவை?**

1. யோசேப்பு – மார்ச் 19
2. திருமுழுக்கு யோவானின் பிறப்பு – யூன் 24
3. பேதுரு, பவுல் - யூன் 29
4. அனைத்துப் புனிதர் - நவம்பர் 1.

**446. புனித திருமுழுக்கு யோவானைத் தவிர வேறு எந்த புனிதருடைய நாளைத் திருச்சபைச் சிறப்பாகக் கொண்டாடுகிறது?**

புனித கன்னி மரியாவின் கணவரும் இயேசுவின் வளர்ப்புத் தந்தையுமான புனித யோசேப்பு, இவருக்கு இரு நாள்கள் விழா எடுக்கப்படுகிறது:

அ) **மார்ச் 19:** மரியாவின் கணவர், இயேசுவின் வளர்ப்புத் தந்தை:

ஆ) **மே 1:** தொழிலாளரான புனித யோசேப்பு

**குறிப்பு:** இவருக்கு உரிய சிறப்பு நாள் புதன் கிழமை.

**447. புனித யோசேப்பு எதற்கெல்லாம் பாதுகாவலர்?**

திருச்சபை, தொழில், படிப்பு, நன்மரணம், கற்பு

**448. திருத்தூதர்கள் என்பவர் யாவர்?**

இயேசு தமக்குப் பதிலாக உலகம் எங்கும் நற்செய்தியை அறிவிக்க உருவாக்கிய பன்னிரு முக்கிய சீடர்களுக்குக் கொடுத்த பெயர். இவர்களோடு யூதாசுக்குப் பதிலாகத் தெரிந்துகொள்ளப்பட்ட புனித மத்தியாஸ், தமஸ்கு நகர் காட்சியின்போது இயேசுவால் அழைக்கப்பட்ட புனித பவுல், தூய ஆவியாரால் நியமிக்கப்பட்ட புனித பர்னபா ஆகியோரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**449. திருத்தூதர்களின் விழாக்களும் அவர்களுக்கு உரிய சின்னங்களும் எவை?**

1. திருத்தூதர்: பேதுரு, பவுல் - விழா நாள்: யூன் 29
   சின்னம்: சாவிக்கொத்து, வாள்
2. திருத்தூதர்: அந்திரேயா - விழா நாள்: நவம்பர் 30
   சின்னம்: X வடிவ சிலுவை, உடைவாள்
3. திருத்தூதர்: யாக்கோபு (செபுதேயுவின் மகன்)
   விழா நாள்: யூலை 25 - சின்னம்: உணவு கிளிஞ்சல்
4. திருத்தூதர்: யோவான் - விழா நாள்: டிசம்பர் 27
   சின்னம்: எழுதும் இறகு கொண்ட கிண்ணம்
5. திருத்தூதர்: பிலிப்பு - விழா நாள்: மே 3
   சின்னம்: சிலுவை கம்பு
6. திருத்தூதர்: பர்த்தலமேயு - விழா நாள்: ஓகஸ்ட் 24
   சின்னம்: கத்தி
7. திருத்தூதர்: மத்தேயு (வரி தண்டினவர்)
   விழா நாள்: செப்ரம்பர் 21 - சின்னம்: கைக்கோடாரி
8. திருத்தூதர்: தோமா - விழா நாள்: யூலை 3
   சின்னம்: ஈட்டி
9. திருத்தூதர்: யாக்கோபு (அல்பேயுவின் மகன்)
   விழா நாள்: மே 3 - சின்னம்: கழி



10. திருத்தூதர்: சீமோன் (தீவிரவாதி)
    விழா நாள்: ஒக்ரோபர் 28 - சின்னம்: ரம்பம்
11. திருத்தூதர்: யூதா ததேயு (யாக்கோபுவின் மகன்)
    விழா நாள்: ஒக்ரோபர் 28 - சின்னம்: கனத்த தடி
12. திருத்தூதர்: மத்தியா - விழா நாள்: மே 14
    சின்னம்: போர் கோடாரி

**450. மறைச் சாட்சியர் என்பவர் யாவர்?**

கிறிஸ்தவ நம்பிக்கையைக் காப்பாற்றுவதற்காக தங்கள் உயிரைக் கொடுத்தவர்கள் மறைச்சாட்சியர். இவர்கள் கிறிஸ்துவின் பாஸ்கா மறைநிகழ்வுகளோடு தங்களைச் சிறப்பான விதத்தில் ஒன்றித்திருக்கச் செய்தார்கள். அதாவது கிறிஸ்துவுக்காக இரத்தம் சிந்தியவர்கள்.

**451. மறைப்பணியாளர்கள் என்பவர் யாவர்?**

இவர்கள் (ஆயர்கள், அருள்பணியாளர்கள்) தங்கள் அருள்பணி வாழ்வில் புனிதம் கொண்டு வாழ்ந்தவர்கள்.

**452. மறைவல்லுநர்கள் என்பவர் யாவர்?**

இவர்கள் தங்கள் அறிவுத்திறனாலோ இறைவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அன்றாட வாழ்வின் கொடைகளினாலோ கிறிஸ்துவைப் பிறருக்குப் பறைசாற்றியவர்கள். உலகைக் கிறிஸ்துவிடம் கொண்டுவந்தவர்கள். இவற்றினால் இறை அன்பைச் சுவைக்கச் செய்தவர்கள்.

**453. மேய்ப்பர்கள் என்பவர் யாவர்?**

இவர்கள் கிறிஸ்துவின் மேய்ப்புப்பணியைப் பின்பற்றியவர்கள் தம்மைச் சுற்றியுள்ள சூழலில் தம் மறைப்பணியை ஆற்ற அழைக்கப்பட்டவர்கள்.

**454. ஆதீனத் தலைவர்கள் என்பவர் யாவர்?**

இவர்கள் துறவற மடங்களின் தலைவர்கள். துறவறத்தின் திருநிலைப்பாட்டு அமைப்பு முறைக்கு ஏற்றவாறு ஆன்மீக, உலகு சார்ந்த பொறுப்புகளைக் கொண்டவர்கள்.

**455. துறவியர் (ஆண்/ பெண்) என்பவர் யாவர்?**

**ஆண் துறவியர்:** இவர்கள் குறிப்பிட்ட தலத்திருச்சபையின் அருள்பணியாளர்கள் அல்ல.

**பெண் துறவியர்:** துறவற வாழ்விற்குள் நுழைவதற்குமுன் திருமணம் செய்துகொண்டவர்கள். மேலும் இவர்களில் கன்னியரும் துறவியரும் உண்டு.

**456. வனத்துறவியர் என்பவர் யாவர்?**

துறவு நோக்கத்திற்காக பாலைநிலப் பகுதியில் வாழ முற்பட்டவர்கள். இருப்பினும் தங்களின் ஆதீனத் தலைவர்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தவர்கள். இவர்கள் உலகப் பற்றை முற்றிலும் துறந்து அமைதியில், இறைவேண்டலில், தவத்தில் நிலைத்து நின்றவர்கள்.

**457. கன்னியர் என்பவர் யாவர்?**

இறக்கும் வரையிலும் திருமணம் செய்யாமலிருந்து, கற்பு என்ற புண்ணியத்தைக் காப்பாற்றி வாழ்ந்த புனிதப் பெண்களே கன்னியர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களில் 1. கன்னியர் என்றும் 2. மறைச்சாட்சியரும் கன்னியரும் ஆனவர் என்றும் 3. துறவியரும் கன்னியரும் ஆனவர் என்றும் மூன்று பிரிவினர் உண்டு.

**458. நற்செய்தியாளர்களின் திருவிழா நாள்களும், சின்னங்களும் எவை?**

1. **நற்செய்தியாளர்:** மத்தேயு
   **திருவிழா நாள்:** செப்ரம்பர் 21 - **சின்னம்:** மனிதத் தலை
2. **நற்செய்தியாளர்:** மாற்கு - **திருவிழா நாள்:** ஏப்ரல் 25
   **சின்னம்:** சிங்கம்
3. **நற்செய்தியாளர்:** லூக்கா - **திருவிழாநாள்:**ஒக்ரோபர் 18
   **சின்னம்:** பலியிடுவதற்கான எருது
4. **நற்செய்தியாளர்:** யோவான்
   **திருவிழா நாள்:** டிசம்பர் 27 - **சின்னம்:** கழுகு

**459. புனிதர்களைக் குறித்துக் கொண்டாடப்படும் பெரிய திருநாள் எது?**

நவம்பர் முதல் திகதியில் திருச்சபை அனைத்துப் புனிதர்களின் திருவிழாவைக் கொண்டாடுகிறது. இந்நாளில் புனிதர்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ள புனிதர்கள் மட்டுமன்றி, இன்னும் விண்ணகத்திலுள்ள அனைவரையும் கொண்டாடுகிறது.

**460. நவம்பர் முதல் திகதி ஏன் அனைத்துப் புனிதர்களின் நாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது?**

கி.பி 609இல் உரோமைப் பேரரசர் /போகஸ் என்பவர் எல்லா கடவுள்களுக்கு என்று இருந்த பாந்தயோன் என்ற கோவிலை மரியாவுக்காகவும் மறைச்சாட்சியர்க்காகவும் மீண்டும் நேர்ந்தளித்தார். இதைச் சிறப்பிக்கும் விதத்தில் நாளடைவில் இந்நாள் நவம்பர் முதல் திகதிக்கு மாற்றப்பட்டது.

**461. புனிதர்கள் அனைவரின் திருநாளுக்கு அடுத்து வரும் நாளில் திருச்சபை கொண்டாடுகிற திருநாள் எது?**

இறந்த அனைத்து நம்பிக்கையாளர் திருநாள். உத்தரிக்கிற தலத்திலே வேதனைப்படும் இறந்த நம்பிக்கையாளருக்காக நாம் சிறப்பாக மன்றாடி, அவர்களுக்கு ஆறுதல் வருவிக்கும்படி திருச்சபை இத்திருநாளை ஏற்படுத்தி இருக்கிறது. இந்நாளில் ஒவ்வொரு அருள்பணியாளரும் மூன்று திருப்பலிகள் நிறைவேற்ற திருச்சபை அனுமதி அளிக்கிறது.

**462. ஒவ்வொரு மாதமும் யாருக்கு அர்ப்பணிக்கப்படுகிறது?**

“Catholic Source Book” என்ற நூலிற்கிணங்க,

ஜனவரி – புனித குழந்தையர்
பெப்ரவரி – திருக்குடும்பம்
மார்ச் - புனித யோசேப்பு
ஏப்ரல் - தூய ஆவியார் / தூய்மைமிகு நற்கருணை
மே – புனித மரியா
யூன் - இயேசுவின் திரு இதயம்
யூலை - இயேசுவின் திரு இரத்தம்
ஓகஸ்ட் - தூய்மைமிகு நற்கருணை
செப்ரம்பர் - மரியாவின் ஏழு துயரங்கள்
ஒக்ரோபர் - செபமாலை மாதா
நவம்பர் - இறந்த அனைத்து நம்பிக்கையாளர்
டிசம்பர் - அமல உற்பவ அன்னை

**463. ஒவ்வொரு நாளும் யாருக்கு/ எதற்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது?**

“Catholic Source Book” என்ற நூலிற்கிணங்க,

ஞாயிறு – மூவொரு கடவுள்
திங்கள் - உத்தரிக்கிற தல ஆன்மாக்கள் / தூய ஆவியார்
செவ்வாய் - காவல் தூதர்கள், புனித அந்தோனியார்
புதன் - புனித யோசேப்பு
வியாழன் - தூய்மைமிகு நற்கருணை
வெள்ளி - இயேசுவின் திரு இரத்தம்
சனி - மரியா

### 5. ஆசி வழங்குதலும் புனிதப்படுத்தலும்

**“விடுதலை அளிப்பவர் ஆண்டவர், தம் மக்களுக்கு ஆசி வழங்குவாராக” (திபா 3:8)**

**465. ஆசி வழங்குதல் என்பது என்ன?**

இறைமக்களுக்கு இறைவனின் உதவி அல்லது சில சிறப்பு நன்மைகள் கிடைக்கும்படி திருச்சபை தனது பணியாளர்களைக் கொண்டு செய்யும் மன்றாட்டோ ஒரு நிகழ்வோ ஆசி வழங்குதல் எனப்படும், (உ+ம்) அருள்பணியாளர், ஆயர், திருத்தந்தை ஆகியோர் வழங்கும் ஆசி, நற்கருணை ஆசி.

**466. புனிதப்படுத்துதல் (Blessing) என்பது என்ன?**

ஒரு பொருளை அல்லது இடத்தை உபயோகிப்பவர்களுக்கு இறைவனின் அருள் கிடைக்கும்படி திருச்சபை தன் அருள்பணியாளர்களைக் கொண்டு செய்யும் வேண்டுதல் ஆகும். (எ.கா) பொருள்கள், ஆள்கள், கட்டங்கள், இடங்கள், கால்நடைகள், பறவைகள், உணவு, தாவரங்கள், மருந்து, கருவிகள் இவற்றை புனிதப்படுத்துதல்.

**467. திருநிலைப்படுத்தல் / நேர்ந்தெளித்தல் (Consecration) என்பது என்ன?**

எந்த ஓர் ஆளையோ ஒரு பொருளையோ இறைபணிக்கு என்றே நியமிக்கும்படி திருச்சபை ஏற்படுத்தி இருக்கும் திருநிகழ்வு ஆகும். இதற்கு கிறிஸ்மா தைலம் பயன்படுத்தப்படுகிறது. இதனால் ஆள்கள் திரு ஆள்களாகின்றனர். பொருள்கள் திருப்பொருள்கள் ஆகின்றன (எ.கா) ஆயர், அருள்பணியாளர்கள், திருதொண்டர் ஆகியோரும் கோவில், பீடம், திருக்கலங்கள் போன்றவையும்.

**468. யாரெல்லாம் ஆசி வழங்கலாம்?**

திருவழிபாட்டிலோ திருவழிபாட்டிற்குப் புறம்பாகவோ ஆசி வழங்குதல் என்பது கிறிஸ்துவின் குருத்துவத்தின் ஒரு செயல். திருமுழுக்கின் வழியாக குருத்துவத்தில் நாம் எல்லாரும் பங்குபெறுவதால் நாம் எல்லாருமே ஆசி வழங்கலாம். ஆசி வழங்குதலைக் கொண்டாடலாம். ‘ஆசியுரைகளும் மந்திரிப்புகளும்’ என்னும் நூல் ஒவ்வொன்றிற்கும் உரிய பணியாளர்களைக் குறித்துக் காட்டுகிறது. ஆயர், அருள்பணியாளர், திருத்தொண்டர், திருமுழுக்கு குறித்துக் காட்டும் குருத்துவத்தின் அடிப்படையில் பொதுநிலையினர் ஆகியோர் (எண் 18).

**469. ஆசி வழங்குதல் எவ்வாறு அமைய வேண்டும்?**

**ஆசி வழங்குதல் இரு பிரிவுகளைக் கொண்டது,**

அ) இறைவார்த்தை வழிபாடு ஆ) புகழ்ச்சியும் மன்றாட்டும்

“ஆசியுரைகளும் மந்திரிப்புகளும்” எனும் திருச்சடங்கு நூலின் பொது முன்னுரை இவ்வாறு கூறுகிறது: ‘ஆசி வழங்குதலின் வெளி அடையாளங்கள், குறிப்பாக சிலுவை அடையாளம், நற்செய்தியைப் பறைசாற்றுதல், நம்பிக்கையை வெளிப்படுத்துதல் இவற்றின் அடையாளங்களாக இருக்கின்றன. ஆனால் கொண்டாட்டத்தில் செயல்முறை பங்கேற்பை உறுதிப்படுத்தும் பொருட்டும் எந்தவித மூட நம்பிக்கையிலிருந்தும் பாதுகாக்கும் பொருட்டும் இறைவார்த்தை வழிபாடோ மன்றாட்டோ இடம்பெறாமல் ஆசி வழங்குதலின் அடையாளம் வழியாக மட்டும் ஒரு பொருளின்மீதோ இடத்தின்மீதோ ஆசி வழங்க பொதுவாக அனுமதியில்லை” (எண் 127).

**(அடுத்த இதழிலும் தொடரும்)**

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.183

## யாக்கோபு எழுதிய திருமுகம்

உங்கள் விடைகளை நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | | 03 | | | | | 04 |
| | 05 | | ❖ | | ❖ | | ❖ | 06 | |
| 07 | ❖ | | 08 | | | 09 | ❖ | ❖ | |
| 10 | | | ❖ | | ❖ | | | | 11 |
| | ❖ | | ❖ | | 12 | | 13 | | 14 |
| | ❖ | 15 | ❖ | 16 | | | | | |
| | ❖ | 17 | | | | 18 | ❖ | 19 | |
| 20 | ❖ | ❖ | | 21 | ❖ | ❖ | 22 | ❖ | |
| 23 | | | ❖ | | ❖ | 24 | | 25 | 26 |
| | 27 | | ❖ | ❖ | 28 | | | | |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. ...................... உலர்ந்து போம்.
3. ................................ களைப் பிழையின்றிச் செய்து முடிக்க வேண்டும்.
8. அங்கே போய் ................................
10. ............ கடவுளுக்கு ஏற்புடைய செயல்கள் நிறைவேறத் தடையாயிருக்கிறது.
17. முடியும் எனக் ................ ங்கள்.
19. நெருப்பை நரகத்திலிருந்தே .............. கிறது.
23. .............. பாராட்டிப் பெருமை கொள்கிறீர்கள்.
24. மறை ...................... வாக்கு இவ்வாறு நிறைவேறியது.
27. எதன் மீதும் ......................... யிடாதீர்கள்.
28. அவரே மீட்கவும் அழிக்கவும் .....................

### வலமிருந்து இடம்

3. ............... களைப் பாருங்கள்.
4. நம்பிக்கையை ........................ பெறச் செய்தன.
9. மாட்சிமிக்க ................. ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவிடம் நம்பிக்கை.
11. .................... களுங்கூட நடுங்குகின்றன.
18. வார்த்தையைக் ............. அதன்படி நடவாதோர் — ஒப்பாவர்
21. ..................... செயல்களால் பேறு பெற்றவர்.
27. ........................... பார்த்துச் செயல்படாதீர்

### மேலிருந்து கீழ்

1. மறையும் .................. போன்றவர்கள் நீங்கள்.
2. அதனால் ............ என்ன?
3. .................... அலையைப் போன்றவர்கள்.
4. நடுவர் வாயிலில் .................... கொண்டிருக்கிறார்.
7. ................. யாற்றிக் கொள்ளுங்கள்.
9. உப்பு நீர்ச்சுணையிலிருந்து .............. கிடைக்காது
10. நாவும் — ஒரு ............... உறுப்புதான்.
11. பொய் .................. வேண்டாம்
12. ............... க்கு எட்டியுள்ளது.
13. நல்ல விளைச்சலை எதிர்பார்த்து முன்மாதிரியும் ....... மாதிரியும்.
14. செல்வர்களே ....................க் கேளுங்கள்
21. என் கால் பக்கம் ...........யில் உட்கார்
22. .............. கொடைகள் — வருகின்றன.
24. என்று மறை ................ உரைக்கின்றது.
25. ஒருவருக்கொருவர் .............. ங்களை அறிக்கை செய்து கொள்ளுங்கள்.

### கீழிருந்து மேல்

5. இல்லை எனவும் .............. லுங்கள்.
6. உடல் முழுவதையும் ............ படுத்துகிறது.
7. கடவுளைப் ................ பது என்பது உங்களுக்குத் தெரியாதா?
9. உண்மையை அறிவிக்கும் வார்த்தையால் .......... ஈன்றெடுக்க அவர் விரும்பினார்.
11. தளராமனமுடையோர் .................. பெற்றோர்.
13. ........................ யின்றிச் செய்து முடிக்க வேண்டும்.
15. .................. விண்ணிலிருந்து வருவதல்ல.
16. உலகத்தோடு ..................
19. மேலும் அவர் கடவுளின் நண்பா என்றும் ......... பெற்றார்.
20. .............. நம்மைப் போன்ற எளிமையான மனிதர் (யகரம் குறுகியுள்ளது)
26. சமயப் ...................... பயனற்றது.
27. .................... எனவும் இல்லை என்றால் இல்லை எனவும் சொல்லுங்கள்.

# மனநலம் காக்க மனம் விட்டு .....

11ஆம் பக்கத் தொடர்ச்சி

இன்னும் நாம் பணி புரியும் இடங்களிலும்கூட ஒருவர் ஒருவரோடு அன்போடு பேசும்போதும் கவனத்தோடு செவிமடுக்கும்போதும் மற்றவர்களின் புண்பட்ட மனங்களுக்கு எமது பேச்சும் செவிமடுப்பும் மருந்தாக அமையும். உண்மையாக இருக்கும் நண்பனிடம் உள்ளத்தைத் திறந்துவிடு. மருத்துவ செலவு மிச்சம் என்றுகூடக் கூறலாம். உன்னுடைய இதயத்தை மற்றவர்களது இதயத்தோடு பேசுவதற்கு அனுமதி என ஆன்மீக ஆசிரியரும் யோகியுமான ஹார்பஜிங் சிங் குறிப்பிடுகிறார்.

பணியிடங்களில் ஒருவர் மற்றவர்களுக்கு ஆறுதலாகப் பேசும்போது வேலைசார் அழுத்தங்கள் ஓரளவு குறைந்துவிடும். மாறாக மேலிடங்களுக்கு போட்டுக்கொடுத்தல், வேலைக்கு ஆப்பு வைத்தல், மற்றவர்களுக்குள் சண்டை மூட்டிவிடுதல் போன்றவை எமது தரக்குறைவான ஆழுமைப் பண்புகளை வெளிக்காட்டுவன. ஆகவே இவ்வாறான கீழான செயற்பாடுகளைத் தவிர்த்து, பணியிடங்களில் ஒருவா் மற்றவருக்கு ஆறுதலாக உதவியாக இருப்போம். அப்போதுதான் வேலைசாா் அழுத்தங்கள் குறையும். பணியிடமும் சுமுகமாக, ஆரோக்கியமானதாக இருக்கும்.

பாடசாலையை விசேடமாக எடுத்து நோக்கும்போது எமது பிரதேசங்களைப் பொறுத்தவரையில் போரின் அவலத்தை நேரில் கண்டு அனுபவித்த பிள்ளைகளும் ஆசிரியர்களும் உண்டு. அதைவிட இன்று பிள்ளைகளுக்கு எத்தனையோ சமூகப் பிரச்சினைகள் உண்டு. பிள்ளைகள் பலவித பிரச்சினைக்கு உட்பட்டவர்களாக இருக்கின்றனர். எனவே பாடசாலையில் ஆசிரியர்கள், சகமாணவர்கள் ஒருவர் மற்றவரோடு அன்பான வார்த்தைகளை ஆறுதலான வார்த்தைகளைப் பேசவேண்டும். “விட்டுக்கொடுங்கள், விருப்பம் நிறைவேறும்” எனும் அப்துல் கலாமின் வார்த்தைகளையும், “மன்னிப்பு கொடுங்கள், தவறுகள் குறையும்” எனும் காந்தியடிகளின் வார்த்தைகளையும், “மனம்விட்டு பேசுங்கள், அன்பு பெருகும்” என்ற அன்னை தெரேசாவின் வார்த்தைகளையும் மனதில் கொண்டு வாழும்போது மனநலம் என்பதை ஒவ்வொருவரிலும் உருவாக்க முடியும். மற்றவர்கள் உன் பேச்சை விரும்புமாறு நீ பேசு, மற்றவர்கள் உன்னோடு பேச விரும்புமாறு செவிமடு. உறவு நிலைக்கும், உளநலம் தழைக்கும்.

எனவே மனநலம் காப்பதற்கு மனம்விட்டு பேசுவதே சிறந்த வழியாகும். இதைவிட மனதைச் சாந்தப்படுத்த வேறு வழிமுறைகளைக் கையாள்வதில் தவறில்லை. அதாவது தியானம் செய்தல், யோகா செய்தல் என்பனவும் சிறந்த வழிகள்தான். இருப்பினும் எல்லோரும் இலகுவில் மேற்கொள்ளக்கூடிய இலகுவான வழி மனதுக்குப் பிடித்தவர்களோடு மனம்விட்டு பேசுவதும் பிடிக்காதவர்களைப்பற்றி பேசாமல் இருப்பதும், இயன்றால் அவர்களை மன்னிப்பதுவும் ஆகும்.

எனவே சீனப்பெருஞ்சுவர்போல மதில் கட்டிவிட்டால் அரண்மனை மிஞ்சும். வீடும் கட்டிவிட்டோம் என்ற திருப்தி. சிறு தூசிகூட நுழையாத அளவுக்கு கேற்றும் போட்டுவிட்டோம். அதையும் பென்னம்பெரிய ஆமைப்பூட்டு போட்டு பூட்டியும்விட்டோம். யார் சோலியும் எனக்கு வேண்டாம்.... ஊர் வம்பு எதுவும் வேண்டாம்..... பக்கத்து வீட்டுக்காரன் கூப்பிட்டால் என்ன? ஆபத்தில் அலறினால்தான் எனக்கென்ன? நான் உண்டு என் வேலை உண்டு. அத்தோடு பார்த்து பைத்தியம்போல பல்லைக் காட்டுவதற்கு என் செல்லாத போனுண்டு. தொலைக்காட்சி (தொல்லைக்காட்சி)யும் உண்டு. ஐ இல்லாத ஐ பார்ட் உண்டு. ஹார்ட் இல்லாத லாப்டொப் உண்டு. காசு தந்தாலும் என் வாய் மற்றவரோடு மனம் திறந்து பேசாது. வீட்டை எப்படி இரும்பு அரண்களால் பூட்டி வைத்தேனோ அதேபோல என் மனதையும் கள்ளத் திறப்புப் போட்டால்கூட திறக்காதவாறு இறுக்கமாக பூட்டிவைத்திருக்கிறேன். எமது நிலையை மாற்றுவோம்.....!

வீட்டுக்கு வருபவரை அன்போடு வரவேற்போம். துயரத்தோடு வருபவருக்கு கனிவோடு செவிமடுப்போம். உதவி கேட்பவருக்கு இல்லையெனக் கூறாது உதவி செய்வோம். கல்லான இதயத்தை எடுத்துவிட்டு, சதையான மென்மையான இதயத்தைப் பொருத்துவோம். சுயநலத்தைக் களைந்து பிறர்நலத்தை எம் வாழ்வில் கொண்டு வாழுவோம். ஒருவர் மற்றவரை வாழ்த்துவோம். எம் சமூகத்தில் மனநலத்தைக் காத்திட எம் இதயங்களைத் திறந்து மனம்விட்டுப் பேசுவோம்.

# அமரர் அருட்திரு. சறத் ஜீவன் நினைவு மலர்

(16ஆம் பக்கத் தொடர்ச்சி )

வன்னி முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் இறந்த யாழ்ப்பாண மறைமாவட்டக் குருவான அருட்திரு. சரத்ஜீவன் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவில் ‘ஜீவசாட்சி’ என்ற பெயரில் 240 பக்கங்களைக் கொண்ட ஒரு நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் சரத் ஜீவன் அடிகளார் பற்றிய தம் நினைவுகளை பலரும் பகிர்ந்துள்ளனர். அவருடைய பல வர்ணப் புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன. இதைவிட பல காத்திரமான கட்டுரைகளும் இந்நூல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

“மரண தேவன் இரத்தப் புள்ளிகளால் வரைந்த இன அழிப்புக் கோலத்தின் முற்றுப்புள்ளி முள்ளிவாய்க்கால். சறா! நீ அதன் ஜீவசாட்சி!” என்ற மகுட வாசகம் அட்டைப்படத்தில் இடம்பெற்றுள்ளது.

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 181

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
F. வனஜா,
பள்ளிமுனை,
மன்னார்.



**இரண்டாம் பரிசு:**
ப. அனற்,
சவேரியார் புரம்,
சிலாவத்துறை

**மூன்றாம் பரிசு:**
E. யோண்சன்
அந்தோனியார் வீதி,
பாசையூர்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 75 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 69 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 181ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. செ. ஜெறோம், தாமரைக்குளம், அடம்பன்
02. F. கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
03. செ. அனஸ்ரீனா, தாமரைக்குளம், அடம்பன்.
04. அ. அன்ஸ்லின் பெர்ஜின், பாசையூர், யாழ்ப்பாணம்.
05. தீபன் ஜெனி, வேளாங்கண்ணி ஆலயம், நாச்சிக்குடா.
06. K. அபிஜாஸ் இல: 168, மடுக்கரை, நானாட்டான்.
07. J. நிதுஷன் குரூஸ், லூக்கா வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
08. செ. ஞானச்சந்திரா, முதலியார்குளம், செட்டிகுளம்.
09. தீபன் ஜெனி, வேளாங்கண்ணி ஆலயம், நாச்சிக்குடா
10. ச. வரதன் குரூஸ், லூக்காவீதி, தாழ்வுபாடு, மன்னார்.
11. V. டிவைனா குரூஸ், லூக்கா வீதி, தாழ்வுபாடு, மன்னார்
12. செ. சாள்ஸ் அன்ரனி, தாமரைக்குளம், அடம்பன்.
13. I. இருதயமேரி, இல: 54, கற்குளம், சிதம்பரபுரம்.
14. K. மடோனா, இல: 54, கற்குளம், ஆசிகுளம்.
15. அ. வேவி, சிலாவத்துறை, முருங்கன்.
16. அ. மேரி பற்றிமா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
17. அ. சரோன், சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
18. செ. வில்சன், சின்னப் பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
19. தி. மேரி சுஜாத்தா, தாமரைக்குளம், அடம்பன்.
20. பி. ஜேவின் சிபின், பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
21. நி. நிஜானி, தாமரைக்குளம், அடம்பன்.
22. ம. றொசனிக்கா, சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
23. ப. சுதர்சினி, பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
24. N. அலைக்ஷனா குருஸ், ஆனாள் நகர், வங்காலை.
25. செ. செபமாலை மார்க், 7ம் வட்டாரம், வங்காலை.
26. M. பிளண்ரீனா இல: 34/9, கன்னியர்மட வீதி, மன்னார்.
27. ம. ஜெய பவித்திரா, சின்னக்கடை, மன்னார்.
28. ம. மகாரத்தினம், நெளுக்குளம், வவுனியா.
29. F. யோசியஸ் கனிஸ்ரலா, தோட்டவெளி
30. நோ. சர்மிளா மேரி, கங்கன்குளம், செட்டிகுளம்.
31. வயலட் ஜோன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
32. A.J. பீற்றர் பியன் மனோ, பள்ளிமுனை, மன்னார்.
33. ச. கிறிஸ்ரி, எமில்நகர், மன்னார்.
34. A.S. டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
35. S.M.குலோஜினி, மொறாய்ஸ், 1ம் வட்., வங்காலை.
36. E. நிஷாந்தினி கூஞ்ஞ, குழந்தையேசு வீதி, பேசாலை.
37. யூ. ஆன் ஜெஸ்மின், கற்கிடந்தகுளம், முருங்கன்.
38. M.T. புஸ்பம் மாலா, எமில்நகர், மன்னார்.
39. அ. இசக்கியேல், யோசவ்வாஸ்நகர், தோட்டவெளி.
40. பி. நித்தியானந்தன் குரூஸ், ஆனாள் நகர், வங்காலை.
41. ஜீன் போல் குரூஸ், ஆனாள் நகர், வங்காலை.
42. R. மீரா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
43. திரேசா கிறிஸ்ரோப்பர், பெற்றா, மன்னார்.
44. கெ. சுவீற்ஷன் சுமித், பொன்தீவுகண்டல், முருங்கன்.
45. அ. மெர்லின், பொன்தீவுகண்டல், முருங்கன்.
46. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
47. கெ. ஜன்ஷன், பொன்தீவுகண்டல், முருங்கன்.
48. டா. மேரி ஜேசேப்பின், பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
49. அ. விபுஷிகன் சோசை, ஆனாள் நகர், வங்காலை.
50. ஜீன் மரிய லக்மினி குரூஸ், ஆனாள் நகர், வங்காலை.



# தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**
கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

# ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்



காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 - 11 - 1936
உதிர்வு 31 - 10 - 2016



### திருமதி. பேதுருப்பிள்ளை மரியம்மா
(ஒலிமடு, நானாட்டான்)

**"சீவியத்தில் உம்மை நேசித்தோம், மரணத்திலும் உம்மை மறவோம்"**

காலம் ஓராண்டு கடந்து போனாலும்
அன்போடு அரவணைத்த தாயம்மா நீர்
கூடிவரும் உம் பிள்ளைகள் உம்மை நடுவில் வைத்து
குதுகலிக்கும் பாக்கியம்தான் என்ன?
நெஞ்சம் குமுறுகின்றதே அம்மா
ஓவென்று அழத் தூண்டுகின்றதே அம்மா!
சுற்றிச்சுற்றிப் பார்த்தாலும்
உம்மைக் காணவில்லையே
உம் ஆன்மா ஆண்டவரில் அமைதிபெற
உம் பிள்ளைகள் நாம் பிரார்த்திக்கின்றோம்.
எமக்காய் வேண்டுமம்மா!



**பிரிவால் நினைந்துருகும்,** பிள்ளைகள், மருமக்கள்

## 12ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 - 07 - 1922
உதிர்வு 18 - 10 - 2005



### திரு. மரிசால் கபிரியேல் மொத்தம்
(பெரிய நாவற்குளம்)

**"இதோ உன்னைப் பெயரிட்டு அழைத்தோம் ஆகவே நீ நமக்கே சொந்தம்" (எசாயா. 43:1)**

பாசமிகு தந்தையே ஐயா! அள்ளி எம்மை முத்தமிட்டு அன்பைச் சொரிந்து அறிவுநிறை வார்த்தைகளை முத்துமுத்தாய் மொழிந்தீர்கள். ஐயா ஆண்டவர் பாதையை எமக்குக் காட்டினீர்கள். எப்படி நாம் உங்களை மறப்போம்? ஐயா நீங்கள் இயற்றிய செபங்கள் எத்தனை!
ஓ யேசுவே! மெய்யான தேவனின் சுதனே, எந்தவிதமான கஸ்டத்திலும் அஞ்ஞான மதத்திலும், நெருக்கிடையிலும் உமது நாமத்தை மறுதலியாமல் இருக்க எங்களுக்கு உண்மையான நம்பிக்கையும் திடனும் தந்தருளும் ஆமென்.

**பிரிவால் நினைந்துருகும்,** பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
**தகவல்:** நிர்மலா குருசுதாசன்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 - 07 - 1945
உதிர்வு 10 - 10 - 2016



### திரு. பறுநாந்து குருசுதாசன்
(கள்ளிகட்டைக்காடு)

**"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்" (உரோ. 14:8)**

எம் பாசத்தின் பிறப்பிடமே! எம் குடும்ப சுடரொழியே! ஐயா என்று அழைக்க நீங்கள் இல்லையே! ஓராண்டு அல்ல, எத்தனை ஆண்டுகள் போனாலும் உங்களை எங்கள் நெஞ்சம் மறக்காது. ஒரு நாளாவது உங்களை நினைக்காது இருந்ததில்லை. உங்கள் முகம் எங்கள் மன ஆழத்தில் பதிந்துள்ளது. உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி நிர்மலா, பிள்ளைகள், மருக்கள், பேரப்பிள்ளைகள், மச்சான் மார், மச்சாள்மார், சகோதரர் உறவினர்.
**தகவல்:** மகள் அனித்தா யோன்சன் (ஜெர்மனி)

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 11 - 08 - 1947
உதிர்வு 30 - 08 - 2017



### திருமதி. லோ. அலெக்ஸ்சாந்திரியா கூஞ்ஞு (சிசிலி) - தலைமன்னார்

வந்தாரை வஞ்சனையின்றி வரவேற்று
பாசச்சோறு தந்தனுப்பும் அன்னை இன்று எம்மோடு இல்லை!
மனைவியாய் அன்னையாய் மாமியாய்
அம்மம்மாவாய், அப்பம்மாவாய், பூட்டியாய்
எம் அனைவர்மீதும் பாசமழை பொழிந்த நீங்கள்
இறைவனிடம் எமக்காய் வேண்ட வானகம் சென்றீர்களோ?
பெற்றவர் அன்பைவிட பெரிது இங்கு ஏதம்மா?
ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட இருந்தாலும்
அம்மா உங்களைப் போன்று அன்பு செய்ய
யாரும் இல்லை இவ்வுலகில்!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:** கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரங்கள், உறவுகள்.

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 - 01 - 1944
உதிர்வு 01 - 10 - 2007



### திருமதி. அ. கிறகோரியம்மா (தங்கம்) (விடத்தல்தீவு)

**"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்". (யோவா: 11:25)**

நெஞ்சம் மறக்கவில்லை இனியவளே, நின் செயல்கள்
பஞ்சம் பிணியிலும் உன் மலர்ந்த முகம் வாடவில்லை.
கெஞ்சிவரும் அன்பருக்கு வரையாது தந்தவளே!
நெஞ்சிருக்கும் வரையுமுந்தன் நற்செயல்கள் நாம் மறவோம்
தங்கம் எனும் பெயருக்கே இலக்கணமாய் வாழ்ந்தவள் நீர்!
பங்கமின்றி எம்மையெல்லாம் பரிவுடனே காத்தவள் நீர்!
பொங்கும் புனல்போல அன்பைச் சொரிந்து நின்றீர்!
எங்கும் நிறை இறைவன் உமை அணைக்க இறைஞ்சுகின்றோம்!

**பிரிவால் நினைந்துருகும்:** கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## 04ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 - 10 - 1930
உதிர்வு 12 - 10 - 2013



### திரு. ஹென்றி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் (தாழ்வுபாடு வீதி, மன்னார்)

அன்பின் பெருக்காலே அகிலமதை வென்றவரே
ஆன்ம பலத்தாலே ஆண்டவன்தாள் அமர்ந்தவரே
இனிய குணத்தாலே இல்லறத்தில் மகிழ்ந்தவரே
ஈகைப் பெருக்காலே இதயமெலாம் நிறைந்தவரே
உள்ளத் தொனியாலே இருள்நீக்கி வாழ்ந்தவரே
ஊர்புகழ நாளும் உயர்பணிகள் புரிந்தவரே
எண்ணும் பொழுதெல்லாம் எம்மனதில் உறைபவரே
ஏணிப்படியாய் நின்று எளியவரை உயர்த்திவைத்தீர்
ஐயமறக்கற்று அனைவருக்கும் அறிவு தந்தீர்
ஒற்றுமையாய் வாழுமென எம்மவர்க்குப் புத்தி சொன்னீர்
ஓதுகின்ற செபமாலை முத்திதரும் என்றுரைத்தீர்
ஔவியம் பேசாது அனைவருக்கும் அன்பு தந்நீர்
தந்தையே அப்பா நீர் இறைவனடி இணைந்திடவே
எந்தையே அப்பா ஈசன் அடி நாம் தொழுதோம்.

**பிரிவால் நினைந்துருகும்:**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள்

## 25ம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. அன்ரன் கமலநேசன் பொன்ராஜா
(சின்னக்கடை, மன்னார்)

மலர்வு : 17 - 07 - 1950
உதிர்வு : 24 - 09 - 1992

**"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது" (திருப்பாடல்: 116.15)**

ஆண்டுகள் உருண்டோடி 25 ஆனாலும்
ஓர் நாள் பிரிவுபோல் எம் உள்ளம் ஏங்குகின்றது.
நிறைந்து நிற்கும் உம் நினைவலைகளால்
எம் உணர்வுகளில் உறைவிடமாகிவிட்டீர்.
காலத்தின் நிறைவுகண்டு இறைவனைத் தேடிய
உம் நிலையான வாழ்வில்
எம் கண்ணீர்கள் உதிரலாம்,
ஆனால் நீர் தந்த வளமான அன்பும் பாசமும்
என்றும் உதிர்வதில்லை!

**பிரிவால் நினைந்துருகும்:** பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

**தகவல்: கசியன் பிலிப்புபிள்ளை**

## திருப்பாலத்துவ சபை தேசிய ......

**5ஆம் பக்கத் தொடர்ச்சி**

இந்த கருத்தரங்கின் அமர்வுகளில் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் அருட்பணியாளர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த தலைப்புகளில் உரையாற்றினார்கள்.

**உரைகளும் உரையாற்றியவர்களும்**

"பிள்ளைகளின் மனதையும் வழிநடத்துபவர்களின் ஆன்மீகத்தையும் புரிந்துகொள்ளுதல்" – அருட்பணி. அன்ரனி நிலந்த "இன்றைய நவீன சமூகத்தில் பிள்ளைகள் சந்திக்கும் சவால்கள் மற்றும் திருப்பாலத்துவ சபையின் முக்கியத்துவம்" – கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை. "தொடர்பு சாதனங்கள் முழு மறைபரப்பின் ஓர் வழி" – அருட்பணி. லால் புஷ்பதேவா. "பாப்பிறை மறைபரப்புச் சபைகளின் கருவியாக நான்கு மறைபரப்பு சமூகங்கள் பணியாற்றுகின்றன." அருட்பணி. நீரோ ஆபிரகாம்.

மன்னார் மறைமாவட்டத்திலிருந்து அருட்பணி. யூட் குருஸ் அடிகளார் தலைமையில் மன்னார், மடு, முருங்கன் மற்றும் வவுனியா ஆகிய மறைக்கோட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அருட்பணி. பெனோ, அருட்பணி, ரஜனிகாந், அருட்பணி. லக்ஸரன்,அருட்பணி. எமில், அருட்பணி. மரிய கிளைன், மற்றும் அருட்சகோதரிகளான றூபி, சுகனியா, வெரோணிக்கா, சுகன்ஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.


# மன்னா

## செப இராகங்கள்
### திருவழிபாட்டிற்கான திருஇசைத் தொகுப்பு

கவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தினால் 'செப இராகங்கள் - திருவழிபாட்டிற்கான திரு இசைத் தொகுப்பு' என்ற பெயரில் கத்தோலிக்க பாடல்களின் மாபெரும் தொகுப்பு நூல் ஒன்று இவ்வாண்டு ஜுலை மாதம் வெளியிடப்பட்டுள்ளது.

704 பக்கங்கள் கொண்ட இந்நூலில் 1624 பாடல்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கவிஸ் ஆன்மீகப் பணியகத்தின் முன்னாள் இயக்குனர் அருட்திரு. அந்தோனிதாஸ் டலிமா



அவர்கள் இந்நூலை வெளிக்கொணர்வதற்காக முன்னின்று உழைத்துள்ளார்.

## சிறுக்கண்டல்
### ஆலயத் திறப்பு விழா சிறப்பு மலர்


சிறுக்கண்டல் புனித அந்தோனியார் ஆலயத் திறப்பு விழாவையொட்டி கடந்த ஓகஸ்ட் 27ஆம் திகதி "கோடி அற்புதர் குடியமர்ந்த பதி" என்ற மகுடத்தின்கீழ் 80 பக்கங்கள் கொண்ட ஒரு சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது.

இம்மலரில் ஆசிச் செய்திகள், சிறுக்கண்டல் பங்கின் குருக்கள் துறவியர் பற்றிய விபரங்கள், புனித அந்தோனியார், ஆலய வரலாறு, சிறுக்கண்டல் கிராமம் பற்றிய கட்டுரைகள், சிறுக்கண்டல் உடையார், கண்டிக்குழி புலவர் பற்றிய



விரிவான குறிப்புகள், புகைப்படங்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

## அமரர் அருட்திரு. சரத் ஜீவன் நினைவு மலர்



(இம்மலர் பற்றிய விரிவான விளக்கம் 14ஆம் பக்கத்தில்)

# நினைவுத் நினைவுகள்

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 08 2004



உதிர்வு 20 10 2015

### செல்வி. R. சதுஷிகா
(கட்டையடம்பன், மடுறோட்)

ஆண்டவர் தம் ஊழியரின் உயிரை மீட்கின்றார்!

எம் அன்புச் செல்வமே சதுஷிக்குட்டி!
ஆண்டிரண்டு ஆனாலும் ஆற்ற முடியவில்லைத் தாயே
எம் ஆறாத் துயரத்தை!
இருந்தும் உயிர்வாழ்கின்றோம்
அனைத்தையும் ஆற்றவல்ல அற்புத தேவன்
மீண்டும் எம் அன்புச் செல்வம் உம்மை
எம்மிடம் தந்துவிட்டார் என்ற நம்பிக்கையில்!
தூதர்கள் கூட்டத்தில் நீரும் சேர்ந்து
எந்நாளும் இறைவனைப் புகழ்ந்திட வேண்டுகிறோம்!

பிரிவால் நினைந்துருகும்,
அப்பா, அம்மா, தம்பி, தங்கை.

## 07ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 06 1988



உதிர்வு 06 10 2010

### செல்வன். ந. சில்வஸ்ரன்
(பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்)

அன்பின் ஒளிக் கூடே! பாசத்தின் இருப்பிடமே!
எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஏழு ஆனது
எம் உள்ளத்தின் துயரம் இன்னும் ஆறவில்லை
நித்தம் நித்தம்... உன் நினைவுகள்......
எம்மைத் துயரத்தில் ஆழ்த்துகின்றது!
உம் ஆன்ம சாந்திக்காக
இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்,
குடும்பத்தினர், உறவினர்கள்.

## 11ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 05 1958



உதிர்வு 28 10 2006

### திரு. ஞானப்பிரகாசம் அமிர்தநாதன் (அமுதன்)
(இல: 114, மில் வீதி, வவுனியா)

மண்ணில் மடிந்து பலன்தரும்
விதைகளின் பெருமைக்கு நிகரில்லை.
அதேபோல் மாண்டனாய் அவதரித்து
எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பதைவிட
வாழும்போது என்ன செய்தோம் என்பதே முக்கியமானது

அப்பா நீங்கள் செய்த மனிதாபிமானப் பணிகள் மூலம்
இன்றும் இம்மண்ணில் வாழ்கின்றீர்கள்.
எம் தந்தையே! உங்கள் வாழ்வை மறக்க முடியுமா?
ஆண்டவர் பாதம் நீங்கள் அமர்ந்திருக்க
எந்நாளும் எம் செபத்தில் வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும் குடும்பத்தினர்

## நிலைவாழ்வின் 31ம் நாள் நினைவு

மலர்வு 30 12 1926



உதிர்வு 22 08 2017

### திருமதி. யாகப்பு திரேசம்மா
(யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி)

அன்போடு எமை ஆதரித்து பண்போடு எமை வளர்த்தாய்
உன்போல ஒரு தாயை இவ்வுலகில் காண்போமோ இனி
நின் நினைவால் வாடுகின்றோம் எந்நாளும் நாமே.
தேடிப் பெறமுடியாத எம் பொக்கிஷமே
வாடி நிற்கும் உம் உறவுகளைப் பாரம்மா
கூடி நாங்கள் புலம்புகிறோம் அறிவாயோ
கோடி செல்வம் அல்லவோ நீ எமக்கு!

இறைவனை நிதமும் நிறைவாய் போற்றிப் புகழ்ந்தவரே
குறைகள் நிறைந்த எமக்காய் இறைவனிடம் வேண்டிடுவீர்!

பிரிவால் நினைந்துருகும்,
பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 08 1983



உதிர்வு 02 10 2007

### செல்வி. ம. சுமிதா
(பேசாலை, மன்னார்)

எம் கண்ணில் உயிராய் இருந்தாய் நீ
இன்று காற்றில் கலந்துவிட்டாய்.
இம்மண்ணில் உன்னைப்போல்
இனி யாரை நாம் காண்போம்?
பிரிந்த உயிர் விண்ணில் நட்சத்திரமாய்
மின்னுமாம் என்று பிறர் சொல்லிக் கேள்விப்பட்டதுண்டு.
இன்று எம் கண்களுக்கு அனைத்திலும்
நீயாகவே தெரிகிறாய்.
என்றும் எங்கள் உயிர்க் கூட்டில் நீ வாழ்ந்துகொண்டிருப்பாய்!
ஆண்டவன் பாதத்தில் என்றும் அமைதி கொள்வாய்!

பிரிவால் நினைந்துருகும்,
குடும்பத்தினர்

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 01 09 1927



உதிர்வு 10 09 2017

### திருமதி. அதிரியான் திரேசாள் றெவ்வல்
(றோசா) (வங்காலை)

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் -
(ஆன்றோர் வாக்கு)
நீங்கள்தான் எங்கள் அன்புத் தெய்வம் அம்மா
கண்களை விளக்காக்கி, கரங்களைத் தொட்டிலாக்கி,
குருதியை அமுதாக்கி, இரவைப் பகலாக்கிய
எங்கள் பாசமிகு தெய்வம் நீங்களே அம்மா!
அன்பின் ஊற்று, இரக்கத்தின் இருப்பிடம் நீங்கள் அம்மா!
உங்களுடைய உயர்வை, சிறப்பை, பெருமையை,
தியாகத்தை, அன்பை, பாசத்தை, நேசத்தை, இரக்கத்தை
எடுத்துச் சொல்ல எந்த ஒரு மொழியிலும் போதிய அளவு
வார்த்தைகள் இல்லை!
உங்களது ஆன்மா இறைவனில் இளைப்பாற
மன்றாடுகிறோம்...!

பிரிவால் நினைந்துருகும்,
குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.